பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 24 செவ்வாய்க்கிழமை 9-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 11

## ஊடுருவிய புலி உறுப்பினர் சுட்டுக் கொலை

வவுனியா, டிச. 9

மணலாறுப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையின் செயலாளர் சிவநாதன் கிஷோர் இந்த இளைஞரின் சடலத்தை நேற்று பதவியா ஆஸ்பத்திரியில் பொறுப்பேற்று வவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத்தில் தரித்து நின்ற வாகனத்தில் ஆயுதங்கள் மீட்பு!

### சந்தேகத்தின் பேரில் எண்மர் கைது!!

கொழும்பு, டிச. 9

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் என்பனவற்றை கடந்த சனியன்று சீ.ஐ.டி. பொலீஸார் மீட்டனர்.

விமான நிலையத்தில் வாகனங்கள் தரித்து நிறுத்தப்படும் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றில் அவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வர் நேற்றுக் காலை கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கைதா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிந்திய கரைகளில் பாதுகாப்பு

புதுடில்லி, டிச. 9

விடுதலைப் புலிகள் தென் பகுதிக் கரையோரங்கள் ஊடாக இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வது என இந்திய அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியத் தேர்தல் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தமுடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் விடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்கே தேர்தல் அறிவிப்பு

## அரசின் திட்டம் அதுதான்

கொழும்பு, டிசம்பர் 9

தமிழ்க் கட்சிகளிடையே ஐக்கிய உணர்வு ஏற்பட்டுவருவதால் குழம்பியுள்ள அரசாங்கம் அதை முறியடிக்கும் நோக்குடனேயே வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் என்ற குண்டைத் தூக்கிப் போட்டிருக்கின்றது.

கொழும்பில் உள்ள பிரபல அரசியல் ஆய்வாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அண்மைக் காலத்தில் பல்வேறு விடயங்களில் தமிழ்க் கட்சிகளிடையே ஐக்கிய உணர்வு உருவாகி வருவது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விடயமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

அரசின் தீர்வுத் திட்டத்தில் அதிக அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்துவது —

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிரான அரசின் தீர்மானத்தை ஒரே மூச்சில் எதிர்ப்பது —

இணைப்புக் குறித்துத் தீர் மானிக்க சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தும் அரசின் திட்டத்தை முறியடிக்க கூட்டுத் திட்டம் வகுத்தல் —

வடக்கில் கைதான பின்னர் காணாமற் போனோர் விவகாரத்தை சர்வதேச ரீதியில்

(10 ஆம் பக்கம் பாரிக்க)

## ரெலோ மத்திய குழு இன்று கூடி முடிவெடுக்கும்

கொழும்பு, டிச. 9

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்குபற்றுவதா என்பது குறித்து ரெலோ அமைப்பின் மத்திய குழு இன்று கொழும்பில் கூடி முடிவு செய்யும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெலோவின் தலைமைக்குழு கடந்த ஞாயிறன்று கூடிய போதும், தேர்தல் குறித்து திட்டவட்டமான முடிவு ஏதும் அங்கு எடுக்கப்படவில்லை. அதனையடுத்தே தேர்தல் குறித்துத் தீர்மானம் எடுப்பதற்காக மத்திய குழு இன்று கூடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சந்திரிகா திடீரென லண்டன் பயணம்?

கொழும்பு, டிச. 9

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் திடீரென லண்டன் பயணமானதாக நேற்று இரவு தனியார் செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது.

இத் திடீர் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என நம்பப்படுவதாகவும் கூறப்பட்டது.

இன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ளும் முக்கிய மாநாடொன்றும் நடைபெற உள்ளது.

ஜனாதிபதியின் மேற்படி விஜயத்திற்கான காரணம் ஜனாதிபதி நாடு திரும்புவது தொடர்பான தகவல் ஆகியவை குறித்து இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வமான அறிவிப்பும் வெளியாகவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக்கு பதிலடியாக ஈ.பி.டி.பி. நேற்று அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் நடைபெறவுள்ள தேர்தல்களை ஒத்திவைக்குமாறு தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நேற்று முன்தினம் விடுத்த பத்திரிகை அறிக்கையைக் கண்டித்து ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று பதில் அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றி கடந்த 8 ஆம் திகதி தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துவடக்கு—கிழக்கு மாகாண அரசை ஏற்ற கூட்டணியினர் இன்று தமிழர் தாயகத்தை பலகூறுகளாக்கி தாரைவார்த்து, தமது இரு

(10 ஆம்பக்கம் பார்க்க)

## இரணைமடுக் குளம் நாளை வான் பாய விடப்படும்!

வவுனியா, டிச. 9

வன்னிப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் இரணைமடுக் குளத்தில் நீர் மட்டம் அணையை உடைத்துவிடக் கூடிய அபாய அளவை நெருங்கியதை அடுத்து அந்தக் குளத்தின் 11 வான் கதவுகளும் நாளை அதிகாலை முதல் முற்றாகத் திறந்து விடப்படவுள்ளன.

இதனால் இரணைமடுப் பாதை ஊடாக வன்னிப் பெரு நிலப்பரப்பின் கிழக்கு மேற்குப் பிரதேசங்களுக்கு இடையே இடம்பெறும் போக்குவரத்து [illegible] முற்றாகத் தடைப்படும் என்று [illegible]

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. பேத்தாளையில் இரு படையினர் பலி!

மட்டக்களப்பு, டிச. 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை — கல்குடா வீதியில் பேத்தாளையில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஒட்டப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவக் குழுவொன்றின் மீது புலிகள் பதுங்கியிருந்து இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

அதே நேரம் நேற்றுக்காலை வாழைச்சேனை உசைன் ஏற்றத்தில் மிதிவெடிச் சம்பவமொன்றில் ராணுவ வீரரொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கண்ணன் கிராமத்தில் இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோக சம்பவமொன்றில் [illegible] பிரபாகரன் (12 வயது) என்ற சிறுவன் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா சிவமணி

மறவன்புலவைச் சேர்ந்த திருமதி நடராசா சிவமணி அவர்கள் 8-12-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், சண்முகநாதனின் அன்புத் தாயாரும், பவளதேவியின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-12-97 இல் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந. சண்முகநாதன்,
(மகன்)
அ. பொன்னுத்துரை

39, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (51690)

## சிதம்பரப்பிள்ளை புண்ணியமூர்த்தி

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை புண்ணியமூர்த்தி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை — தங்கம்மாவின் அருமை மகனும், முருகேசு — கனகம்மாவின் அன்பு மருமகனும், இரத்தினம் பரமேஸ்வரியின் (இரட்ணம்ஸ், நெல்லியடி) பெறாமகனும், கனகசபை — நேசமலரின் (கணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அருமை மைத்துனரும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், சிந்துஜா, சிந்துஜன், சிலக்ஷா ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சரஸ்வதி, மனோன்மணி, இராசமலர் (கனடா), இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சடாட்சரம், பரமநாதன், சுந்தரலிங்கம், லலிதராணி, தேவபாலசுந்தரன் (ஜேர்மனி) சிவா ஆகியோரின் மைத்துனரும், துரைராசசிங்கத்தின் சகலனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நகுலேஸ்வரி
(மனைவி)

178/1, ஞான வைரவர் லேன்,
அரசடி றோட்,
கந்தர்மடம். (51689)

## திருமதி பாக்கியம் தேவநேசன்

(தம்பையா)

மண்டைதீவை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியம் தேவநேசன் (தம்பையா) 08-12-97இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலஞ் சென்ற சகோ. தேவநேசனின் அன்பு மனைவியும், தேவபாலன் (ஜெகா) (வானொலி திருத்துனர்) அவர்களின் அன்புத் தாயாரும் அருள்மொழியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 09-12-97 செவ்வாய்க்கிழமை பி. ப. 2-30 மணிக்கு (புதியநேரம்) இல. 111, கண்டி வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள இலங்கை பெந்தகோஸ்தே சபையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காகக் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. யஸ்ரின்
(மருமகன்)

இல. 3, சோமசுந்தரம் லேன்.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (51688)

## புங்குடுதீவு சின்னத்தம்பி பொன்னையா

புங்குடுதீவு ஊரதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா 7-12-97இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானசின்னத்தம்பி— இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா — சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீ வைகுந்தவாசன் (கொழும்பு), கயிலாயபதிவாகன் (லண்டன்), தமிழரசி (கனடா), கலையரசி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியராணி, பிரேமவசந்தி (லண்டன்), பத்மகுமாரி (குமார்) (கனடா), இளஞ்சேய் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமாவும், சகிலா, சிவசங்கரி, அபிராமி, ஆதிரையன், அர்ச்சிதா, அபிலாஷா, துளசிகா, லக்சிகா, இளமைந்தன், இளவேந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், நாகலிங்கம், பொன்னம்மா காலஞ்சென்றவர்களான தங்கம், சவுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மநாதன், காலஞ்சென்ற பரலோகநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்சாலையில் 08 - 12 - 1997 முதல் 10 - 12 - 1997 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10 - 12 - 1997 புதன்கிழமை மாலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4.00 மணியளவில் தகனத்திற்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. ஸ்ரீ வைகுந்தவாசன்
(மகன்)

தாளையடி லேன்,
திருநெல்வேலி. (51670)

# சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், டிச. 9

பிள்ளையார் பெருங்கதை ஆரம்பமாகவுள்ளதை ஒட்டி நல்லூர் வடக்கு சந்திரசேகப் பிள்ளையார் கோயிலில் ஆலயச் சூழல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த சனி, ஞாயிறு இரு தினங்களும் இடம்பெற்ற சிரமதான நிகழ்வை நல்லூர் வடக்கு விநாயகர் விளையாட்டுக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 9

கோண்டாவில் ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோயிலில் பாலஸ்தாபனம் இடம்பெற்று ஆலய புனருத்தாரண வேலைகள் தற்சமயம் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஐ)

## படையினர் மீது புலிகள் ஷெல் வீச்சு

கொழும்பு, டிச. 9

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மீது விடுதலைப்புலிகள் கடந்த சனியன்று ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் 3 படையினர் காயம் அடைந்தனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## மின்னல் தாக்கி மூவர் பலி!

கொழும்பு, டிச. 9

இலங்கை — இந்திய அணிகளுக்கிடையே இடம்பெற்ற கிரிக்கெட் நேர்முக வர்ணனையை வானொலியில் கேட்டு ரசித்துக் கொண்டிருந்த மூவர் மின்னல் தாக்கி மரணமானார்கள்.

தென்பகுதியில் வெல்லவாயா என்னுமிடத்தில் கடந்த வாரம் இச் சம்பவம் இடம் பெற்றது. (ஐ-10)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டி . 9

தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் தாமதமாகக் கிடைத்தமையால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மீண்டும் நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1 இல் நடைபெற உள்ளதாக பணிப்பாளர் சு. இரத்தினராசா அறிவித்துள்ளார். (ஐ-9)

## நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிச. 9

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இன்று முற்பகல் 10 மணிக்கு நத்தார் விழா நடைபெறவுள்ளது. (ஐ)

## வரணியில் பாலர் பாடசாலை அமைப்பு

தென்மராட்சி, டிச. 9

வரணி வடக்கு கனுக்காய் பகுதியில் அப் பகுதி மக்களால் புதிய பாலர் பாடசாலைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலர் பாடசாலைக்கான தளபாடங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

ஜனவரி மாதம் இயங்கவுள்ள இப்பாலர் பாடசாலை கொடிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# BARATHY

சித்தன்கேணி.

**ஆண்டு 6 முதல் 11 வரை**

பிரிவு 2 ஆரம்பம்: 10-12-97 புதன் 3.00 மணி

எமது தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. தேவா |
| கணிதம் | — திரு எஸ். சிவரூபன், திரு. நடா |
| தமிழ் | — திரு. சின்னத்தம்பி, திரு. நஞ்சன் |
| ஆங்கிலம் | — திரு. தெய்வதவபாலன், திரு. அருமைநாயகம் |
| வரலாறு, சமூகக்கல்வி | — திரு. ஆர்த்திகன், திரு. சிவா |
| வர்த்தகம் | — திரு. சுபேசன் |
| சமயம் | — திரு. கோபி |
| விவசாயம் | — பிரபல ஆசிரியர் |

புலமைப்பரிசில் வகுப்பு
ஆண்டு 5 நடைபெறுகின்றன.

ஆசிரியர் — திரு. க கனகசபை
(இளைப்பாறிய அதிபர்)

குறிப்பு:-

மேற் குறிப்பிட்ட ஆசிரியர்களுடைய வகுப்புகள் சித்தன்கேணியில் எமது நிறுவனத்தில் மட்டுமே நடைபெறும். (49869)

# தசாக அறிவித்தல்

## பிரம்மஸ்ரீ பரமசாமிஐயர் குமாரசாமிஐயர்

(ஓய்வுபெற்ற சித்திர ஆசிரியர்)

**1—12—97** அன்று சிவபதம் அடைந்த பிரம்மஸ்ரீ பரமசாமி ஐயர் குமாரசாமிஐயர் அவர்களுடைய ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

**10-12-97** புதன்கிழமை தசாகம்
**11-12-97** வியாழக்கிழமை - ஏகோதிஷ்டம், மாசியம்
**12-12-97** வெள்ளிக்கிழமை - சபிண்டீகரணம்
**13-12-97** சனிக்கிழமை - கிரகயக்ஞம் (சமாராதனை)

மேற்படி நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

மருமகன், பேரப்பிள்ளைகள்.
சிவன் கோயிலடி, புத்தூர். (51687)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கனகசபை கனகசபை யோகேஸ்வரன்

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், சத்திரந்தையை வசிப்பிடமாகவும், தற்போது மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகசபையும், அவரது மகன் கனகசபை யோகேஸ்வரனும் மன்னாரில் காலமாகிவிட்டனர்.

இவர்கள் சிதேவிப்பிள்ளையின் அன்புக் கணவரும் அன்பு மகனுமாவர்.

ஈமக்கிரியைகள் மன்னாரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. காராளசிங்கம்
(மகன்)

சந்திரந்தை,
காரைநகர். (51661)

## திருமதி மனோன்மணி கயிலாயபிள்ளை

இல. 192, நாவலர் றோட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி மனோன்மணி கயிலாயபிள்ளை 8 - 12 - 97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கயிலாயபிள்ளையின் (அத்தான் கடை) அன்பு மனைவியும், திருமதி நித்தியானந்ததேவி, திருமதி உதயராணி, உதயகுமார், உதயகலா, உதயமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், க. உலகநாதன், க. சற்குணநாதன் (கணக்காளர், ப.நோ. கூ. சங்கம் — கைதடி), கைலாயநாயகி ஆகியோரின் சகோதரியும், திருமதி ராசமணி பூரணசற்குணம் (சங்கானை), சிவயோகம் (திருநெல்வேலி), புவனேஸ்வரி (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேசநாதன், நேசராசா (கனடா) ஆகியோரின் மாமியாரும், செல்வி துளசிகா, அருண், அஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-12-97) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. உதயகுமார்
(மகன்)

192, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (51691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீது ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை

## நீதிபதி ஜெயின் மறுப்பு

புதுடில்லி, டிச.9

ராஜீவ் கொலையின் பின்னால் உள்ள சதி தொடர்பாக விசாரித்துவரும் ஜெயின் ஆணைக்குழு தமிழர்களை ஒட்டுமொத்தமாக குற்றஞ்சாட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு அளித்தவர்கள் மற்றும் அவர்களுக்கு ஊக்கமளித்த தமிழர்கள் ஆகியோர் குறித்த தகவல், 17 பாகங்கள் அடக்கிய இடைக்கால அறிக்கையின் சிறு பகுதிதான் என்று ஜெயின் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் தொடர்பான தகவலும் அறிக்கையில் தரப்பட்டுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜீவை கொல்ல10கோடி ரூபா பேரம் பேசியதாக நேபாள அரசி கூறியதாக நாளேடுகளில் வந்த செய்தி, மத்திய உள்துறை அமைச்சகத்தின் உளவு நிறுவனத்திடம் இருந்து வந்த ஊர்ஜிதம் செய்யப்படாத ஒரு வரித் தகவல் ஆகியவையும் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை குறித்து நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் வெளியான கடுமையான விமர்சனம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவுக்கு விளக்கமளித்து நீதிபதி ஜெயின் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழர்கள் குறித்து அறிக்கையில் இடம்பெற்றுள்ள பகுதிகள் தமிழக முதல்வர் கருணாநிதி உட்பட பல்வேறு தலைவர்களின் கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றது.

தி. மு. க. மற்றும் தனி நபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இந்த அறிக்கை இடைக்கால அறிக்கைதான். இது எந்த வித அடிப்படையும் இல்லாதது. ராஜீவை கொலை செய்வதற்கு முன்பும், பின்பும் நடந்தசதிவேலைகள் குறித்த விசாரணைகள் இன்னும் பூர்த்தியாகாத நிலையில் எவர் மீதும் குற்றம் சுமத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று நீதிபதி ஜெயின் கூறியுள்ளார்.

17 பாகங்கள் அடங்கிய ஜெயின் அறிக்கையில் முதல் எட்டுப்பாகங்களில்தான் இடைக்கால அறிக்கை அடக்கியுள்ளது. எஞ்சிய 9 பாகங்களில் ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருப்பது குறித்து பல்வேறு அரச, பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து வந்த கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன என்றும்—

ஆணைக்குழுவில் அளிக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களை வைத்துத்தான் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டதாக முன்னதாகவே தாம் கூறியிருந்தாகவும்—

இடைக்கால அறிக்கை பத்திரிகைகளுக்கு கசிந்தமைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்றும்— நீதிபதி ஜெயின் கூறியுள்ளார். (இ-3)

## சோனியா காந்தியை மூப்பனார் சந்தித்தார்

புதுடில்லி, டிச. 9

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்லியில் சோனியா காந்தியை சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை வெளியானதையடுத்து தி.மு க— தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து சோனியாவுடன் மூப்பனார் விவாதித்திருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

தி.மு.கவுடன் உறவை துண்டித்துக் கொள்ளவேண்டும் என்று தமிழ் மாநிலக் காங்கிரஸில் ஒரு பிரிவினர் தலைமையை வற்புறுத்தி வருகின்றனர். (இ-3)

## ரஜனிகாந்தைச் சந்தித்தார் த. மா. காங்கிரஸ் அமைச்சர்

புதுடில்லி, டிச. 9

மத்திய அமைச்சரும், தமிழ் மாநிலக் காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவருமான எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் நடிகர் ரஜனிகாந்தை ஞாயிறன்று சந்தித்துப்பேசியுள்ளார்.

சென்னையில் போயஸ் தோட்டத்தில் உள்ள ரஜனியின் வீட்டில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இருவரும் அரை மணிநேரம் பேசிய போதும் அங்கு பேசிய விவரங்கள் வெளியாகவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் சந்திப்பு முக்கியமாகக் கருதப்படுகிறது. (இ-3)

## அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பு!

புதுடில்லி, டிச. 9

''தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி அ. தி. மு. கவுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது''

இப்படி மூத்த காங்கிரஸ் தலைவர் விஜயபாஸ்கர ரெட்டி தெரிவித்தார்.

ஹைதரபாத்தில் ஞாயிறன்று அவர் அளித்த பேட்டி ஒன்றில், ஜெயின் கமிசன் அறிக்கை வெளியான பின்பும் தி. மு. க. — தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி நீடிப்பது வேடிக்கையாக இருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்கள் நேரு குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள். அவ்வாறு இருக்கையில் அவர்கள் தி. மு. க. கூட்டணியில் எவ்வாறு தொடர்ந்து அங்கம் வகிக்க முடியும்.

மாநிலங்களில் மதச் சார்பற்ற கட்சிகளுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ள காங்கிரஸுக்கு வாய்ப்பு உள்ளது. மத்தியில் காங்கிரஸ் இல்லாத கூட்டணி அரசுகள் இதுவரை நான்கு தடவைகள் பதவி ஏற்றுள்ளன. ஆனால் ஒரு தடவையாவது அந்தக் கூட்டணிகளால் முழு பதவிக்காலத்துக்கும் ஆட்சி நடத்த முடியவில்லை. காங்கிரஸ் கட்சியால் மட்டுமே நிலையான ஆட்சியை அமைக்க முடியும்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்திரத்தன்மை மற்றும் மதச் சார்பின்மையை முன்நிறுத்தி காங்கிரஸ் போட்டியிடும்.

வகுப்புவாத சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக ஐக்கிய முன்னணியில் உள்ள பல கட்சிகள் காங்கிரஸுக்கு எதிராக செயற்பட்டு வந்ததால் தான், அதற்கான ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## மணிப்பூரில் காங். பிளவு!

இம்பால், டிச 9

மணிப்பூர் மாநிலத்தில் காங்கிரஸ்கட்சி பிளவுபட்டு விட்டது.

சட்டசபையின் சபாநாயகர் நியமாதாசிங் தலைநகர் இம்பாலில் செய்தியாளர்களிடம் பேசுகையில் 38 சட்டசபை உறுப்பினர்களில் 23 பேர் ஒன்றுசேர்ந்து தம்முடைய தலைமையின் கீழ் மணிப்பூர் மாநில காங்கிரஸ் என்ற பெயரில் புதிய கட்சி அமைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவியில் இருந்து தாம் ராஜினாமாச் செய்துவிட்டதாகவும் —

துணை சபாநாயகரிடம் ராஜினாமாக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதாகவும் — அவர் மேலும் கூறினார்.

இதே சமயம் இம்மாதம் 15ஆம் திகதி மணிப்பூர் சட்டசபையில் காங்கிரஸ் அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை நிரூபித்துக் காட்டுமாறு மணிப்பூர் முதலமைச்சர் நிசாங்கிஸிங்கிடம் மாநில ஆளுநர் சிறிவஸ்தவா கோரி உள்ளார் (இ-3)

## நியூசிலாந்துக்கு பெண் பிரதமர்

வெலிங்டன், டிச. 9

நியூசிலாந்தின் முதல் பெண் பிரதமராக ஜானி செப்லின் பதவி ஏற்றுள்ளார்.

வெலிங்டனில் அரசாங்க இல்லத்தில் கவர்னர் ஜெனரல் மைக்கல் ஹரிபோய் இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அதற்கு முன்னதாக முன்னாள் பிரதமர் போல்ஜரின் பதவி விலகலை கவனர் ஜெனரல் ஏற்றுக்கொண்டார்.

ஏழு ஆண்டுகள் பதவி வகித்த போல்ஜரின் கன்சர்வேட்டிவ் கட்சியை வழி நடத்தி மூன்று தடவைகள் ஆட்சி அமைத்திருந்தார்.

கடந்த மாதம் கட்சிக்குள் இடம்பெற்ற அதிகாரப் போட்டியில் ஜானி செப்லின் கட்சித்தலைமைப் பொறுப்பையும், பிரதமர் பதவியையும் பிடித்தார். (இ-3)

## எண்ணெய்க்கு பதிலாக மருந்து; ஐ.நா. மீது சதாம் குற்றச்சாட்டு

மசகு எண்ணெய்க்குப் பதிலாக உணவு, மருந்துப் பொருள்களை ஈராக்குக்கு வழங்கும் ஐ நாவின் திட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஈராக் குற்றஞ்சாட்டி உள்ளது. எண்ணெய் விற்பனையை நிறுத்தவும் ஈராக் முடிவு செய்துள்ளது,

ஈராக் அதிபர் சதாம் ஹுசெய்ன் இதற்கான உத்தரவை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் இந்தச் செயல் சாதாரண ஈராக் மக்களிடம் சதாம் ஹுசெய்னுக்கு அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஈராக் மக்களின் துன்பங்களுக்கு சதாமே பொறுப்பு என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (இ-3)

### உலக அரங்கில்

## கராச்சியில் நால்வர் சுட்டுக்கொலை

கராச்சி, டிச. 9

கராச்சியில் அடையாளம் தெரியாத குண்டர் படையினரால் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் அரசின் ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## கோழிகளுக்கு ஏற்படும் 'கோ வைரஸ்' என்னும் நோய் மனிதரைத் தாக்கும் அபாயம்!

ஹொங்கொங், டிச. 9

''கோ வைரஸ்'' என்னும் புதுவாக நோய் ஒன்று உலகம் முழுவதும் பரவும் அபாயம் இருப்பதாக ஹொங்கொங் நாட்டின் சுகாதார அதிகாரி எச்சரித்துள்ளார்.

இந்த நோய் வழமையாக கோழிகளுக்கு மட்டுமே வரும்.

ஆனால் இந்த நோயினால் 54 வயதுடைய ஆண் ஒருவர் இறந்துள்ளார். 13 வயதுப் பெண் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வகையான நோய் பொதுவாக விலங்குகளிடம் இருந்து பரவுகிறது.

இந்த நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடித்து, நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கை தீவிரமாக நடைபெறுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-3)

## தேர்தல் பிரசாரம் செய்ய வருமாறு சோனியாவுக்கு கேசரி அழைப்பு

### ஆனால் இதுவரை பதில் இல்லை

''காங்கிரஸ் கட்சியை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்ய வருமாறு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியாகாந்திக்கு அழைப்பு விடுத்துள்ளோம். ஆனால் அவர் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறார்.

இப்படி காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்துள்ளார்.

சோனியா தேர்தல் பிரசாரம் செய்தால் தொண்டர்கள் உற்சாகம் அடைவார்கள் என்பதால் தலைமையை ஏற்று கட்சியை வழிநடத்துமாறு அவரிடம் தொடர்ந்து நான் கேட்டுவருகிறேன்.

''காங்கிரஸ் வெற்றி பெற்றால், யார் பிரதமர் என்பது அதன் பின்னரே முடிவு செய்யப்படும்.

பிரதமராக யாரையும் முன்நிறுத்தி தேர்தல் பிரசாரம் செய்யமாட்டோம். தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்ற காங்கிரஸ் குழு கூடி பிரதமரைத் தேர்ந்தெடுப்பது [illegible] மாற்றம் இல்லை. எனது தலைமையின் கீழ் கட்சி தேர்தலைச் சந்திக்கும்.

தேர்தல் கூட்டணி பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ''மதச்சார்பற்ற



நிலையான ஆட்சி'' என்பதே எங்களது தேர்தல் கோஷம்.

சமாஜவாதி, பகுஜன் சமாஜகட்சிகளுடன் கூட்டணி வைக்க காங்கிரஸ் ஆர்வமாக இருக்கிறது.

பாரதீய ஜனதாவுக்கு எதிரான கூட்டணியை உருவாகக் முனைப்புடன் உள்ளோம்.

13 கட்சிக் கூட்டணியால் நாட்டை ஆள முடியாது—

இப்படி கேசரி கூறினார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்ட விவரங்களை தெரிவித்தார்.

## குர்டிஸ் போராளிகள் மீது தாக்குதல்

பெரும் எண்ணிக்கையான குர்டிஷ் போராளிகள் துருக்கியப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வட ஈராக் எல்லையைக் கடந்து உள்ளே சென்ற துருக்கியப் படை குர்டிஷ் தொழிலாளர் கட்சிப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

போராளிகள் எதிர்பாராது இருந்த வேளையில் இத்தாக்குதலை நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தியதாக துருக்கிப் படைகள் தெரிவித்தன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு, காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. இராஜரட்ணம், 104/4, குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

[51659]

### புத்தகங்கள் வாங்கப்படும்

பழைய பாடசாலைப் புத்தகங்கள தமிழ், ஆங்கில நாவல்கள் மற்றும் சகலவிதமான புத்தகங்களும் வாங்கப்படும், விற்கப்படும். தொடர்பு: இல. 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

[51647]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள் பரம்பரை பரம்பரையாக வாசிக்க வேண்டிய கதை 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரப்பிள்ளையின் கைவண்ணத்தில் உருவானது. யாழ்நகரில் எங்கும் கிடைக்கும் 50/-.

[51640]

## அறிவுறுத்தல் கூட்டம்

சாவகச்சேரி. டிச. 9

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ ஈ. சாதாரண தர பரீட்சைக்கான கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் பரீட்சை சம்பந்தமான விசேட அறிவுறுத்தல்களும் பரீட்சைக்கான ஆவணங்களும் வழங்கப்படவுள்ளதால் தவறாது கலந்து கொள்ளுமாறு சகல அலுவலர்களுக்கும் தென்மராட்சிக் கல்விக் கோட்ட அலுவலர் இ. கணேசன்கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-31-3)

## பிரெஞ்மொழி

எழுத, பேச, வாசிக்க அடங்கலாக 4 மாத பயிற்சி

by:

**ஸ்ரீ இந்திரகுமார்**
(CAP)

ஆரம்பம்: **02-01-1998**
காலை 9 மணி

★ தபால் மூலமும் ஏற்கக் கூடியது.

**APSS, 116A 2/1**
(2ஆம் மாடி)
காலிவீதி, வெள்ளவத்தை.
T.P. 596547

(51534)

## KUMARAN INSTITUTE

நவாலிவடக்கு, நாச்சிமார் கோயிலடி.

ஆண்டு 3 தொடக்கம் 11 வரை

ஆரம்பம்: 10 - 12 - 1997

புதன் மாலை 3 மணி

| | |
|---|---|
| கணிதம் | — திரு. பாலதாஸ் |
| | — திரு. W. சத்தியசீலன் |
| | — செல்வி T. பதுமா |
| விஞ்ஞானம் | — திரு. நந்திஸ் |
| தமிழ் | — பண்டிதர் K. தயாசீலன் |
| | — செல்வி R. இந்திரா |
| ஆங்கிலம் | — திரு. K. சோமசுந்தரம் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — திரு K. மோகன் |
| | — செல்வி T. வனிதா |
| வர்த்தகம் | — திரு W. ஜெயராஜ் |
| சமயம் | — செல்வி S. ஈஸ்வரி |

— நிர்வாகி

(51663)

## மோக்ஷ தீபக் கிரியை

உரும்பிராய்



### சுப்பையா சபாரத்தினம்ஐயா

(கைதடி வாசர்)

தோற்றம்: **11-02-1924**

மறைவு: **24-11-1997**

குடும்பத்தலைவராகிய தாங்கள் மறைந்து இரண்டு வாரங்கள் ஆகியும், தங்கள் நினைவாகவே இருக்கின்றோம். தங்கள் ஆத்மா சாந்தியுறும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று எங்கள் இல்லத்தில் நடைபெறும் மோக்ஷ தீபக் கிரியைகளில் உறவினர்களையும், நண்பர்களையும் ஊரவர்களையும் பங்குபற்றும் வண்ணம் அழைக்கின்றோம்.

திருமதி தெய்வநாயகி சபாரத்தினமும்.
(மனைவி)
குடும்பத்தினரும்.

''அன்னபவனம்''
கைதடி.

(51668)

## முதலாவது ★ பிறந்ததின வாழ்த்து ★

செல்வன்

### ஜெகதீஸ்வரக்குருக்கள் அருளானந்தசர்மா (அருள்)

**09 - 12 - 97**

ஜெகதீஸ்வரக்குருக்கள், ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அருளானந்த சர்மா (அருள்) தனது முதலாவது பிறந்த நாளை 09 - 12 - 97 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்புப் பெற்றோர், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவரும் மூத்த நயினார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ந. ஜெகதீஸ்வரக் குருக்கள் (ஈசன் ஐயா)
பிரதம குரு

மூத்த நயினார் ஆலயம்,
ஆனைக்கோட்டை.

(51666)

## பரீட்சை நிலையமாற்றம்

க. பொ. த (சா/த) 1997

மருதங்கேணி கல்விக் கோட்டத்திலுள்ள யா/நாகர் கோவில் அ. மி. த. க பாடசாலையில் அமைந்துள்ள பரீட்சை நிலையம் பருத்தித்துறை கல்விக்கோட்டத்திலுள்ள யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக அப்பரீட்சை நிலையத்தோடு சம்பந்தப்பட்ட பாடசாலை, தனியார் பரீட்சார்த்திகள் தங்களைத் தயார் செய்து கொள்ளுமாறு வலயம் 02 இன் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

**கல்விப்பணிப்பாளர்,**
**யாழ். வலயம் -02**

(சி-2294)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

## லைடனின் மலிவு விற்பனை

காலம்:

**1-12-97 முதல் 31-12-97 வரை**

(சகல பொருள்களுக்கும் விசேடகழிவு உண்டு)

## லைடன் புடைவை நிலையம்

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2189)

## 31 ஆம் நாள் இறைவனின் சங்கமத்தில்

மலர்வு: 6 — 01 — 1927



உதிர்வு: 09 — 11 — 1997

### மேரி ஹெலன் குணசிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர்
யா/ கன்னியர்மடம் ம. வி.)

''இன்றுதானே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய்'' (லூக் 23:43)

இறைவா!

தயவும் தாட்சணியமும் உள்ள தலைவியாக, மன்னித்து மறக்கும் மாபெரும் மனைவியாக, அன்பும் அமுதமும் அள்ளிச் சொரிந்த அன்னையாக, நட்பும் நன்னயமும் நிறைந்த நண்பியாக, உண்மையும் ஊக்கமும் உடைய உற்றவளாக எங்கள் அருமை ஹெலன் அம்மாவை எமக்கு ஈந்த இறைவா! நன்றி. அம்மா, அம்மா என்று அன்போடு அழைத்தோம். அக்கா அக்கா என்று அயலவர் சேர அவள் மடியில் நாம் வாழ்ந்தோம் வளர்ந்தோம்

இறைவா! அவள் வாழ்வு உன்னில் சங்கமம் ஆனதே நன்றி இறைவா என்றும் நன்றி.

தலைவன் குணசிங்கம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

66, 6 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(51673)

## நெடுந்தீவு பிரதேச சபை

### 1998 ஆம் ஆண்டு சந்தை இறைச்சிக்கடை குத்தகை

## கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கல் 1997-12-26 ஆம் திகதி பிற்பகல் 12-00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றல் 1997-12-27 ஆம் திகதி பிற்பகல் 1-00 மணி வரை.
கேள்விப்பத்திரம் திறத்தல் 1997-12-27 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணி வரை.

| குத்தகையின் தன்மை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. பொதுச் சந்தை | 1000/- | 100/- | 8000/- |
| 2. மாட்டிறைச்சிக் கடை (சந்தை) | 500/- | 100/- | 6000/- |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
இப்பிரதேச சபை எல்லைக்குள் எனது அனுமதியின்றி எவரும் இறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

எஸ். பி. அருளப்பு
விசேட ஆணையாளர்.

நெடுந்தீவு பிரதேச சபை,
நெடுந்தீவு. 1997-12-08.

(சி/2201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாகரையில் நடந்த ஊர்வலத்தில் 10 ஆயிரம் பேர் பங்கு பற்றினர்

## கிளின்ரனுக்கும் கோபிஅனானுக்கும் மகஜர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசமான வாகரையில் அண்மையில் ஊர்வலம் ஒன்றை பொதுமக்கள் நடத்தினர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் ஆகியோருக்கு தனித்தனியாக மகஜர்கள் அனுப்பி வைக்கப் பட்டன.

வடக்கு–கிழக்கு மக்களின் துன்பங்கள் துயரங்கள் நீக்கப்பட வேண்டும் என்றும்—விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் — மகஜரில் கோரப் பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் உட்பட பல்வேறு விடயங்களும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் ''விடுதலைப்புலிகள் மீதான தடை வாபஸ் பெறப்பட்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்களை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும்'' என வலியுறுத்தப்பட்டுள்ளது.

''அரசு – விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம், 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு என்பன ஐ.நா.பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-21)

### ஒத்திவைப்புக் கோரிக்கைக்கும் மத்தியில்

## யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட கட்சிகள் முஸ்தீபு

கொழும்பு, டிச. 9

யாழ். மாவட்டத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் போட்டியிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஈ. பி. டி. பி. அமைப்பு நாளையும், நாளை மறுதினமும் கூடி இறுதி முடிவுகளை மேற்கொள்ளும் என்று ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக ஈ. பி.ஆர்.எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ரெலோ அமைப்பு இத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் போட்டியிடுவதென முடிவு செய்துள்ள ஈரோஸ் அடுத்த சில நாள்களில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அந்த அமைப்பு பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட்டும் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் அவையும் போட்டியிடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

(இ-21-3)

### திருட்டு

கொழும்புத்துறை புங்கன்குளம் வீதி வில்லையடி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்த உண்டியல் கடந்த புதன் இரவு உடைக்கப்பட்டு அதில்இருந்த பணம் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது (இ-17)

# நனைந்தபடி தீவுப்பகுதி செல்லும் தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் காலையில் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவுத் தபாலகங்களுக்கு பஸ் மூலம் அனுப்பப்படும் தபாற் பொதிகள் தற்போது பெய்து வரும் மழை காரணமாக நனைந்தபின்பே உரிய இடங்களுக்குச்சென்றடைகின்றன.

தபாற் பொதிகள் நனைவதால் உள்ளிருக்கும் கடிதங்களும் விநியோகிக்க முடியாத நிலையில் இருக்கின்றன.

இது தொடர்பாக குறிப்பிட்ட பஸ் சாரதிகளுடன் தொடர்பு கொண்டபோது, பஸ்ஸில் தபாற் பொதிகள் வைக்கப்பட்டுவரும் இடத்துக்கு அருகிலுள்ள ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தமையே காரணமென தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தாம் போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்துக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சாரதிகள் தெரிவித்தனர். (இ-7)

### கமக்காரர் கருத்தரங்கு

வடமராட்சி, டிச. 9

வடமராட்சிப் பிரதேசத்தில் இயங்கி வரும் 60 கமக்காரர் அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கருத்தரங்கும், கமக்காரர் அமைப்புகளுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை புலோலி கமநல சேவை நிலையத்தில் நடைபெறும்.

பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கிலும், பதிவுச் சான்றிதழ் வழங்கும் வைபவத்திலும் யாழ். மாவட்ட கமநல சேவை ஆணையாளர் எஸ். சுந்தரேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-173)

## கூட்டுறவு ஊழியர் சம்பள சுற்றறிக்கை வந்தது

கூட்டுறவு ஊழியருக்கான புதிய சம்பள உயர்வுச் சுற்றறிக்கை யாழ்ப்பாணம்வந்து சேர்ந்துவிட்டதாக யாழ். பலநோக்குக்கூட்டுறவு சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்

கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள உயர்வு செலுற 01-7-97 முதல் அமுலுக்கு வருவதாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை உயர்த்துமாறு கொழும்பிலு உள்ள கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் உயரதிகாரிகளுடன் சிவஞானம் பேச்சு நடத்தியிருந்தார். (ஐ-17)

# கிடைத்த நீரை வயல்களில் தேக்காவிடில் நெற்செய்கை பெரிதும் பாதிப்புறும் அபாயம்!

வானம் பார்த்த பூமியான யாழ்ப்பாணத்தில் ஆறுகள் மலைகள் இல்லை. எனினும் பெயரளவில் ஆறுகளும் மலைகளும் உள்ளன. அவற்றில் ஒன்று''வழுக்கை ஆறு'' இது முன்னர் இயற்கையான ஆறாக இருந்திருக்க வேண்டும் என்பது ஐதீகம். இப்போது அளவெட்டியிலிருந்து அராலிக் கடல் வரை நீண்டு செல்லும் பெரிய வாய்க்கால் முந்திய வழுக்கை ஆற்றின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. இதனை ''வழுக்கி ஆறு''என்றுசொல்லுவோரும் உளர்.

பராமரிக்கப்படாத நிலையில் இருந்து வருகின்றன.

மாரி காலத்தில் வலி. வடக்கைச் சேர்ந்த அளவெட்டி பிணாக்கைக் குளத்தில் மழை நீர் தேங்கி நின்று கந்தரோடை, சங்குவேலி, சண்டிலிப்பாய், கட்டுடை, மருதடி, நவாலி, வட்டுக்கோட்டை கிழக்கு, அராலி ஆகிய இடங்களின் வயல் வெளிகளுக்கு ஊடாகச் சென்று அராலிக் கடலில் சங்கமமாகின்றது.

கந்தரோடைக்குளம், கேலங்காமம்குளம், மருதடிக்குளம், இராயக் குளம், கல்லுண்டாய் தரவைக்குளம் ஆகிய குளங்களில் இந்த ஆற்றின் நீர் தேங்கி நின்று வாய்க்கால்களால் நெற்காணிகளுக்குச் சென்று நெற்பயிரை வளர்த்து வருகின்றது.

### குடாநாட்டில் குறைந்த மழை

இந்த வழுக்கை ஆற்றில் — வாய்க்காலில் — மாரி மழையின் போது நீர் நிறைந்து ஆறு ஒன்று பாய்ந்தோடுவது போலவே ஓடுவதை முன்னர் பார்க்க முடிந்தது, ஆற்றுப் பாதையின் பள்ளமான பகுதிகளை ஆற்று வாய்க்கால் என்று கூறிஅவதானமாகக் கடப்பர். பல சந்தப்பங்களில் அவற்றினூடான போக்குவரத்துத் தடைப்படுவதும் உண்டு.

வழுக்கை ஆறு வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களின் விவசாய செய்கைக்கும், நெற்செய்கைக்கும் அடித்தளமாக நீண்ட காலமாக இருந்து வளம் படுத்தி வந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக குடாநாட்டின் போர்ச் சூழ்நிலை காரணமாக இந்த ஆற்றின் சுமார் 10 மைல் நீளமான படுக்கைப் பாதைகள் சரிவர பேணப்படாத நிலையில், தகுந்த முறையில்

#### பராமரிப்பு இல்லை

கடந்த காலங்களில் இக் குளங்களும், வாய்க்கால்களும் நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் ஆழமாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்ததால் ஆற்று வெள்ளம் இக் குளங்களில் தேக்கப்பட்டு நெற்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டது. மழை குறைந்த மார்கழி, தை மாதங்களிலும் வயற்காணிகளில் தண்ணீர் தேங்கி நின்று நெற்பயிரை அழியவிடாது பாதுகாத்து வந்ததை பலரும் அறிவார்கள். ஆனால் கடந்த சில வருடங்களாக நிலவி வரும் யுத்த கால அனர்த்தங்கள், அடிக்கடி இடம்பெற்ற இடம்பெயர்வுகள் ஆகியவற்றினால் இந்த ஆற்றின் பாசனப் பகுதிகள் தகுந்த முறையில் பராமரிக்கப்படவில்லை.

''ஆற்றுப்'' படுக்கையிலுள்ள பாரிய மதகுகளில் பொருத்தப்பட்டிருந்த துருசுகள், தடுப்புப் பலகைகள் தகுந்த முறையில் பராமரிக்கப்படாத காரணத்தால் செயல் இழந்து போயின. துருசுகள் துருப்பிடித்து அழிந்துவிட்டன.

குறிப்பாக ஆற்றில் பீறிட்டு ஓடும் வெள்ளம் இந்த மதகுகளில் வைத்து தடுப்புப் பலகைகள் மூலம் தடுக்கப்பட்டு சூழவுள்ள வயற்காணிகளுக்குச் சென்று தேங்கி நிற்கக்கூடிய வசதி முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஆற்றுப் படுக்கை பகுதிகளில் மட்டுமன்றி இரண்டு, மூன்று மைல் தூரத்திலுள்ள சங்கானை, வட்டுக்கோட்டை, சங்கரத்தை ஆகிய இடங்களிலும் வயற்காணிகளிலும் வெள்ளம் தேங்கி நின்று பயிர்களை செழிப்படையச் செய்தது. விவசாயிகள் அதிக நெல் அறுவடையையும் பெறமுடிந்தது. ஆனால் தற்போது இந்த ஆற்றினில் வரும் வெள்ளமானது திட்டமிட்ட முறையில் தடுத்து தேக்கப்படாத

**நா. ம. கந்தசாமி**

காரணத்தினால் காணிகளில் தேங்கி நிற்பது மிகவும் குறைவடைந்துள்ளதாகவும் —

மழைநீர் கடலுக்குள் சென்று வீணாகிவிடுவதாகவும் —

அதிக பணச்செலவு செய்து மேற்கொண்ட நெற்செய்கை இனிமழை தொடர்ந்து பெய்யாத விடத்து அழிந்து போகக்கூடிய ஆபத்து உள்ளதாகவும் வடக்குஅராலியைச்சேர்ந்த விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இப்பகுதியில் பொதுவாக நெற் செய்கைக்கென கமநலச் சேவை திணைக்களத்தினால் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட விதை நெல் தென்னிலங்கையில் ஆறு, குளங்களிலிருந்து நீர்பபாசனம் செய்து பயன்பெறக் கூடிய சிறிய 3 மாத $3\frac{1}{2}$ மாதநெல் இனங்கள். இவை எமது வலிகாமம் பிரதேசத்திற்கு பொருத்தமற்றதாக இருக்கிறது என்று விவசாயிகள்

**செய்தி மடல்**

கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தாங்கள் விளைவித்த நெல் இனங்களிலிருந்தே விதை நெல்லை சேமித்து வைத்து பின்னர் அடுத்துவரும் காலபோக விதைப்பின் போது விதைப்பதாகவும், 5 மாதம் தொடக்கம் 6 மாதங்கள் வரை இப் பயிர்களின் காலம் என்றும், பின் மழை இருக்குமாயின் நல்ல ஆறுவடையைப் பெறமுடியும் என்றும் விவ

### நீர்ப்பாசனம் பேணப்படவில்லை

சாயிகளில் சிலர் தெரிவித்தனர்.

இப்பகுதி விவசாயிகள் பெரும்பாலும் தை, மாசி மாதங்களிலேயே அறுவடையை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நீண்ட கால பயிர் வளர்ச்சிக்கு அறுவடைக்காலம் அண்மிக்கும் வரை காணிகளில் தண்ணீர் தேங்கி நின்று ஈரலிப்புப் பேணப்பட வேண்டும். அப்போதுதான் நிறைவான விளைச்சலைப் பெற முடியும் என்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எமது மண்ணுக்கு உகந்த விதை நெல்லின் மூலம் அறுவடையின் போது தரமான வைக்கோலையும் பொறுவதாக அவர்கள் மேலும் கூறினர். வீடுகளில் வளர்க்கும் எருதுகள், பசுமாடுகள் போன்ற கால் நடைகளுக்கு வருடம் முழுவதும் இவ்வைக்கோலை வைத்து பயன்படுத்தி வருவது வழக்கம்.

ஆனால் தென்னிலங்கையிலிருந்து இங்கு கொண்டு வந்து விநியோகிக்கப்படும் விதைநெல் வர்க்கங்கள் மூலம் நல்ல தரமான வைக்கோலை பெறமுடியாது என்றும் பரவலான கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

#### மழைநீர் கடலில்

தற்போது பெய்து வரும் ஓரளவு மழை காரணமாக வழுக்கை ஆற்றில் வெள்ளம் வந்துகொண்டிருக்கின்றது. தொடர்ந்தும் மழை பெய்யும் போது அதிகரித்து வரும் வெள்ளத்தை வீணாக கடலில்போய் கலக்க விடாது தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இதனையே இப் பகுதி விவசாயிகள் பலரும வலியுறுத்துகின்றனர்.

குறிப்பாக வட்டுக்கோட்டை நவாலி பிரதான வீதியிலுள்ளதும் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு பக்கத்திலுள்ளதுமான பெரிய மதகின் வெள்ளத்தடுப்பு அணை பெரிதும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இங்குள்ள துருசுகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் திருத்தியமைக்கப்பட்டபோதிலும் வெள்ளம் வடிந்தோடுவதை தடுக்க கூடிய முறையில்இல்லை என்பதை இப்பகுதி விவசாயிகள்

( 7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு, இனம், மதம் அழியும்வரை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா?

## எதிர்காலச் சந்ததி சபிக்கும் என்கிறார் தேரர்

கொழும்பு, டிச. 9

''இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் அரசாங்கம் முன் வைத்துள்ள யோசனைகள் அமுல் படுத்தப்பட்டால் நாட்டுக்கும், இனத்துக்கும், மதத்துக்கும் பேரழிவு ஏற்படும். இத்தகைய ஆபத்து நிகழ்ந்ததைப் பார்த்துக் கொண்டு ஏன் நீங்கள் வாழாதிருந்தீர்கள் என எதிர்காலச் சந்ததியினர் எம்மைச் சபிப்பர்''

கொழும்பில் நடைபெற்ற பௌத்த இளைஞர் மன்றத்தின் நூற்றாண்டு விழாவில் ஆரம்ப உரை நிகழ்த்துகையில், அஸ்கிரிய மகாநாயக சங்கைக்குரிய பலிபனா ஸ்ரீசந்தானந்ததேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசின் உத்தேச திட்டத்தில் பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்டுள்ள இடம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல: கடந்த 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாக பௌத்த மதத்துக்கு இந்நாட்டில் அளிக்கப்பட்டு வந்த முன்னுரிமை இழக்கப்படுகிறது. சிங்கள இனத்துக்கும் பௌத்த சாசனத்துக்கும் அச்சுறுத்தல்கள் உருவாகிவருகின்றன. இலங்கையில் உள்ள அனைவரும் இலங்கையர் என அழைக்கப்படவேண்டும் என்றால் சிங்களவர்களின் தனித்துவம் என்ன ஆகும்.

அமைச்சர் பீரிஸ் பௌத்த மதத்துக்கு முதல் இடம் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார் ஆனால் ஏனைய மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தே பௌத்த மதத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## பண்ணிசை வகுப்புக்கள்

நல்லூர் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் கர்நாடாக சங்கீத, பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படவிருக்கின்றன.

இந்த வகுப்புக்களில் சேர்ந்து பயில விரும்புபவர்கள் லயன்ஸ் கழக அலுவலத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பருத்தித்துறை நகரப்பகுதியில்

# வீதிகளில் வெள்ளம்; மாணவர் பாதிப்பு

வடமராட்சி, டிச.9

பருத்தித்துறை நகரில் கல்லூரி வீதியையும், விநாயகர் முதலியார் வீதியையும் இணைக்கும் ஓடக்கரை வீதியிலும்—

பருத்தித்துறை— தும்பளை வீதியில் மூன்றாம் குறுக்குத் தெரு நான்காம் குறுக்குத் தெரு சந்திகளுக்கிடையில் உள்ள வீதியிலும் கடந்த சில தினங்களாகப் பெய்து வந்த பெருமழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பருத்தித்துறை நகரில் உள்ள பிரதான பாடசாலைகளுக்கு இந்த வீதிகளால் பயணம் செய்யும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மழைகாலங்களில் இந்த வீதிகளில் வெள்ளம் ஏற்படுவது கடந்த சில வருடங்களாக வழமையாகிவிட்டது. (இ-173)

## செயன் முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம் கல்வி வலயங்களைச் சேர்ந்த தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான பகுதி—I பகுதி—II பாடங்களுக்குரிய செயன்முறைப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாதவர்களுக்கு எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய நாள்களில் பரீட்சை நடைபெறும்.

இப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர்களை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (ஐ)

# கடன் அடிப்படையில் கட்டுமரம் வழங்குமாறு கோரிக்கை

நெல்லியடி, டிச. 9

வடமராட்சிப் பகுதி மீனவர்களின் நலன் கருதி மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க கட்டுமரங்களையும், வலைகளையும் கடன் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனைக்கு விஜயம் மேற்கொண்ட நெதர்லாந்து தூதுக்குழுவினரிடம் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச தலைவர் செ. சூரியகுமாரன் கோரிக்கை விடுத்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கையளிக்கப்பட்ட மகஜரில் அண்மைக்கால வன் செயல்களினால் மீனவர்கள் தமது உடைமைகளை பெருமளவில் இழந்துள்ளனர். மீன்பிடித் தொழிலை கைவிடும் நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் எதிர்கால நலன் கருதி மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் கட்டுமரங்களையும், வலைகளையும் கடன் அடிப்படையில் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-109)

## இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். இந்துக்கல்லூரி லியோக் கழகத்தின் ஆதரவில் கடந்த 5 ஆம் திகதி இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொது மக்கள், ஆசிரியர், மாணவர் உட்பட சுமார் 60 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

இவர்களில் கண்பரிசோதனைக்கு உட்பட்டோரில் 9 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளுக்கான சிபார்சுகள் வழங்கப்பட்டன. நீரிழிவு நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் இருவருக்கு நீரிழிவுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதற்கான வைத்திய நிபுணர் லியோக் கழக மாவட்டத் தலைவர் லயன் நிதவாலன் ஏற்பாடு செய்திருந்தார். (இ)

# சிறிமாவோ தற்போதைக்கு பதவி துறக்க மாட்டார்!

பிரதமர் பதவியைத் துறக்கும் நோக்கமோ அல்லது அரசியலிலிருந்து ஓய்வுபெறும் நோக்கமோ தற்போதைக்கு இல்லை.

இதனை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே தெரிவித்துள்ளார்.

அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது குறித்து வெளியான செய்திகள் தொடர்பாக அவருடன் பத்திரிகையாளர்கள் தொடர்பு கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-21)

# பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டிகள்

நாளை மறுதினம் 11 ஆம் திகதி க.பொ.த (சா/த) பரீட்சை ஆரம்பமாகின்றது. இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தமது இறுதி நேர தயார்ப்படுத்தலை செய்து கொண்டிருப்பார்கள் அவர்களுக்கு சில வழிகாட்டுதல்கள் இவை.

பாடங்களைப் படிக்கும் முறையைக் கொண்டு மாணவர்களை மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1 சிறந்தஇலட்சியங்களோடு படிப்பையே கடமையாகக் கொண்டு படிக்கும் மாணவர்கள்.

இவர்கள் எல்லாவற்றையும் கற்கும் ஆர்வம் உடையவர்கள்.

## ஜி. சீ. ஈ. (சா-த) பரீட்சை நாளை மறுதினம் ஆரம்பமாகிறது

2 ஓரளவு ஆர்வத்துடன் படிக்கும் மாணவர்கள்.

இவர்கள் எல்லாப் பாடங்களிலும் சிறிதளவை அல்லது குறித்த சில பாடங்களில் எல்லாவற்றையும் கற்றறிந்திருப்பார்கள்.

3 தேர்வில் சித்தியடைந்தால் போதுமென்ற நோக்கோடு கற்கும் மாணவர்கள்.

இவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் சில குறித்த பகுதிகளைத் தேர்வு செய்து படிக்கும் தன்மையுடையவர்கள்.

✶ இதில் முதலாம் வகை மாணவர்கள் முக்கியமானவற்றை சுருக்கக் குறிப்பாக எடுத்துக் கொண்டு, நேரம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை மீட்டல் செய்து ஞாபகப்படுத்திக் கொண்டால் பரீட்சையில் உச்ச நிலை அடையலாம்.

★ இரண்டாம் வகையைச் சேர்ந்த மாணவர்கள் கூடுதலாக கஷ்டமான பகுதிகளையே படிக்காது புறக்கணித்து விட்டிருப்பர். இவ்வாறான பகுதிகளை ஆசிரியர்களையோ அல்லது அப்பகுதி தெரிந்த சக மாணவர்களையோ கேட்டு விளங்கிய பின் அவற்றை மீண்டும் மீண்டும் எழுதிப் படிக்கும் போது முதலாம் வகையை எட்டிப் பிடித்து விடலாம்.

★ மூன்றாம் வகை மாணவர்கள் நிறையப் பாடங்களை படிக்காது புறக்கணித்திருப்பர். அவ்வாறில்லாது எல்லாப் பாடங்களிலும் இலகுவானவற்றை கற்க முயல வேண்டும். அதிலுள்ளவற்றில் ஓரளவிற்கு தெளிவு கிடைக்கும் போது ஏனையவற்றையும் கற்கும் ஆர்வம் ஏற்படும்.

இதனால் இரண்டாம் வகையை எட்டிப்பிடித்துவிடலாம். பின்னர் தீவரமாக முயற்சித்தால் முதலாம் வகையை அடையலாம்.

பரீட்சை நெருங்கும் காலங்களில் எல்லாப் பகுதிகளிலும் பரிச்சயம் ஏற்பட்ட பின்னர் கடந்த கால வினாத்தாள்களை அவற்றுக்குரிய நேரத்தினுள் செய்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு விடையளிக்கும் போது கேள்விக்கேற்ற விடைகளை எல்லாவற்றையும் விரைவாக எழுதும் போது அக்குறித்த நேரத்தினுள் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கக் கூடியதாகவரும்.

கேள்வியுடன் சம்பந்தமற்ற விடைகளை எழுதுவதனால் நேரம் போதாமல் போய் விடுகின்றது. முற்றான விடைகளை அளிக்காது விடின் நேரம் மிகையாக இருக்கும். தரப்பட்ட நேரம் மிகையாக அல்லது போதாமல் இருந்தால் அளிக்கப்பட்ட விடையில் கோளாறு இருப்பதனை ஓரளவிற்கு உய்த்தறிய முடியும். இவ்வாறு கடந்த கால வினாத்தாள்களை செய்வது பரீட்சைக்கான ஓர் ஒத்திகையாகக் கொள்ளலாம்.

### மனதில் மீட்க வேண்டும்

படிக்கும் போது ஆர்வத்துடன் படிக்கவேண்டும். ஒவ்வொரு விடயத்தையும் ஏன் எதற்காக, எப்படி என்று சிந்தித்து மிக ஆழமாகப் படிக்க வேண்டும். இடையில் தோன்றும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டும்.

இதற்காகவேனும் பாடப் புத்தகங்களைக் கையாளப் பழகிக் கொள்ள வேண்டும். வகுப்புக் குறிப்புகளில் இல்லாத, தேவையான விடயங்களைப் பாடப்புத்தகங்களில் இருந்து அறிந்து அவற்றை குறிப்பில் இடைச் செருகலாகசேர்த்துக் கொள்ளலாம்.

**பொ. அரவிந்தன்**

இவ்வாறு படித்தவற்றின் முக்கிய பகுதிகளை சிறுகுறிப்பாக எழுதிவைத்துக் கொண்டால் மீட்டல் செய்வதற்கு உதவியாக இருக்கும். ஒவ்வொரு பகுதியையும் படித்து சிறுகுறிப்பு எடுத்தபின்னர் அவற்றை எழுதிப்பார்க்கவும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் குறிப்புக்களோ, சிறுகுறிப்புகளோ [illegible] மீட்டல் செய்ய வேண்டும். அவ்வாறு மீட்டல் செய்கையில் முழுக் குறிப்பும் மீட்டல் செய்யப் பட்டுவிட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரவிரவாக கண்விழித்துப் படிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீண்ட நேரம் விழித்திருப்பதற்காக மாத்திரைகள் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இரவில் ஆறுமணி நேரமாவது ஆழ்ந்து தூங்க வேண்டும். இரவில் படிக்கும் போது தேநீர், கோப்பி என்பனவற்றை அதிகம் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். வறுத்த கொண்டைக்கடலை, பருப்பு என்பனவற்றை கொறித்துக் கொண்டே படிக்கலாம். பரீட்சைக்கு முதல் நாள் நல்ல நித்திரை அவசியம். முதல் நாள் ஆழ்ந்து தூங்காவிட்டால் பதற்றம் காரணமாக தெரிந்த விடைகளைக் கூட மறந்துவிட வாய்ப்பு உண்டு. தூக்கமின்மை, வாந்தி, மயக்கம் என்பனவற்றைக் கூட ஏற்படுத்தலாம்.

பரீட்சைக்காக படிக்கும் காலங்களில் காபோவைதரேற்று அதிகம் கொண்ட கிழங்கு, சோறு, பிட்டு போன்றவற்றை உண்பதைக் குறைத்தல் அவசியம். இது மந்த நிலையை ஏற்படுத்தி சோர்வு, தூக்கம் என்பவற்றை ஏற்படுத்தி விடும். பச்சைக்காய்கறிகள், சத்தான பழங்கள், இலகுவான சாப்பாடு என்பவற்றை அருந்தலாம். உடல் தூய்மையும், நோய் பீடிக்காது பாதுகாத்தலும் பரீட்சைக் காலங்களில் மிக அவசியமானதொன்றாகும்,

### குழுப்படிப்பு

மாணவர்கள் குழுப் படிப்பை மேற்கொள்வது ஓரளவு சிறந்தது. எனினும் இரண்டு அல்லது மூன்று பேருடன் மட்டும் கலந்து கொள்வது அவசியம். இதை மீறும் போது வீணாக கதைகளிலேயே பொழுது போய் விடும். குழுப்படிப்பின் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதிகளைப் படித்து மாறி மாறி ஒருவருக்கு ஒருவராக விளங்கப்படுத்திக் கொள்ளலாம். பின்னர் மற்றவர்கள் விளங்கப்படுத்திய பகுதிகளைத் தாங்களே கற்றறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு விளங்கப்படுத்தும் போது நினைவிலிருந்து தப்பிய விடயத்தைக் குறித்து வைப்பது அவசியமாகும்.

பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை மண்டபத்தில் அமர்ந்து முதலில் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். சுவாசத்தை சீரான முறையில் உள்ளே இழுத்து வெளியே விட்டு எவ்வித பதற்றமும் இன்றி வினாத்தாள்களைப் பெறவேண்டும். சமய நம்பிக்கை உள்ளவர்கள் தமது இஷ்ட தெய்வத்தை ஒரு தரம் நினைத்துக் கொள்ளலாம்.

வினாத்தாளை மேலோட்டமாக, விரைவாக எல்லாவற்றையும் பார்த்து நன்கு தெரிந்த வினாவிலிருந்து எழுதத் தொடங்கலாம். குறித்த நேரத்தில் வினா விற்கான விடை எழுத முடியாவிடின் பதற்றம் எதுவுமின்றி அந்த வினாவை அவ்விடத்திலேயே நிறுத்தி மற்றைய வினாவை ஆரம்பிப்பது கூடிய புள்ளியைப் பெறுவதற்குரிய ஒரு நல்ல வழிமுறையாகும். விடையளிக்கும் போது தெரியாதவற்றுக்கும்இடத்தைவிட்டுச் செல்லலாம். ஒரு நிலையில் அதற்கான விடை சிந்தனை ஓட்டத்தில் தட்டுப்படும். அந்த நேரம் அதற்கான பதிலை அளிக்கலாம்.

இந்த முறைகளைப் பின்பற்றும்போது பரீட்சையில் வெற்றி அடைவது நிச்சயம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடியாக மற்றொரு பெரும் தாக்குதல் சாத்தியப்படாதாம்

## யுத்த ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, டிச. 9

''வன்னி மன்னகுளம் தாக்குதல் போன்று மற்றொரு பெரும் தாக்குதலில் ஈடுபட இரு தரப்பினருக்கும் நீண்ட காலம் தேவை.''

இப்படி யுத்த ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இருதரப்பினரும் மற்றொரு தாக்குதலில் ஈடுபடத் தற்போதைய பருவமழை சாதகமானதாக இல்லை.

வெற்றிஉறுதி இராணுவ நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்புக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டது மன்னகுளம் தாக்குதலில் தான் என்றும் ரோய்ட்டர் மேலும் தெரிவித்துளளது.

(இ-21)

# வட.-கிழக்கில் சேவையாற்ற 75 டாக்டர்கள் பின்னடிப்பு!

## பல கோரிக்கைகள் முன்வைப்பு

கொழும்பு, டிச 9

வடக்கு—கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ள 75 டாக்டர்களும் சில நிபந்தனைகளை முன்வைத்து அங்கு சென்று பணியாற்ற மறுப்புத் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வருடத்தில் உள்ளகப் பயிற்சியை முடித்து வெளியேறும் டாக்டர்களிலேயே இவர்கள் வடக்கு—கிழக்கில் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்த டாக்டர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்த உள்ளது.

இவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் வருமாறு:—

★ மாதமொரு தடவை வி. முறையில் சென்று வர இலவச விமானப்போக்குவரத்து வசதி.

★ சேவைக்காலத்தில் அகாலமரணம் ஏற்பட்டால் குடும்பத்துக்கு முழுச்சம்பளமும், மேலதிக கொடுப்பனவும்—

★ சேவைக்காலத்தில் 10 லட்சம் ரூபாவுக்கு காப்புறுதி வசதி.

★ ஆறுமாதகால சேவையின் பின்னர் வடக்கு—கிழக்குக்கு வெளியே இடமாற்றம்.

(இ-21-3)

# கூட்டுறவு ஊழியர் துப்பாக்கி சூட்டில் மரணம்

மட்டக்களப்பு புனானை சோலையில் கடந்த சனிக்கிழமை இரவு பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கூட்டுறவு ஊழியரொருவர் கொல்லப்பட்டார்.

அயல் வீடு ஒன்றில் தொலைக்காட்சி பார்த்துவிட்டு வீடுதிரும்பும் போது இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர் அருணாசலம் கிருபானந்தம் (22 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(இ-21)

# எம்பிலிப்பிட்டிய படுகொலை:

## சந்தேக நபர்களை கைது செய்ய முடியாத நிலை

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர் படுகொலை தொடர்பான மேல் விசாரணைகளைத் தொடர முடியாத நிலைமை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் படையினர் வடக்குக் கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் அவர்களைக் கைது செய்து விசாரணை செய்ய முடியாமையே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இப்படி இவர்கள் கைது செய்யப்பட்டால் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினர் மத்தியில் குழப்பநிலை ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டப்படுவதாக ''யுக்திய'' வார இதழ் தகவல வெளியிட்டுள்ளது.

யுத்தம் தொடரும் வரை சந்தேக நபர்களை கைது செய்ய முடியாத நிலையே நிலவும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (இ-10-3)

சுகாதாரத் துறையினருக்கு

# யாழ்ப்பாணத்தில் பயிற்சி நடத்த பிரயத்தனத்தின் பின்பே அனுமதி

## மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் தெரிவிப்பு

திருநெல்வேலி, டிச 9

''பிராந்திய மட்டத்தில் பொது சுகாதார பரிசோதகர்களின் பயிற்சி நெறியை நடத்துவதற்கான அனுமதியையும் அங்கிகாரத்தையும் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சிடமிருந்து பெறுவதற்கு நாங்கள் மிகவும் பிரயத்தனப்பட்டு கஷ்டப்பட வேண்டியிருந்தது. தமிழ் மொழியில் பயிற்றுவிப்பதற்கு இங்கு விரிவுரையாளர்கள் இல்லை. மாகாண அமைச்சுக்கு இது போன்ற பயிற்சிகளை நடத்த அதிகாரம் இல்லை என்று கூறப்பட்ட போதிலும் இறுதியில் இங்குள்ள நிலைமைகளை எடுத்துக் கூறிய பின்பு தான் அனுமதி கிடைத்தது. இப்பயிற்சியை சிறந்த முறையில் இங்கு நடத்துவதற்கு யாழ். சுகாதார பிரதி மாகாணப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். சுகாதார அபிவிருத்திக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பயிற்சி நெறியை இன்று இங்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்''

திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேற்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை முற்பகல் யாழ். சுகாதாரத் திணைக்கள கட்டடத்தில் பொது சுகாதரப் பரிசோதகர் பயிற்சி நெறியை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். சுகாதார, சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் குமாரவேற்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில்:—

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் கடந்த பலவருடகாலமாக நிலவிவரும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பற்றாக் குறையை நீக்குவதற்கு இப்பயிற்சி நெறி பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கிறேன். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வடக்கு—கிழக்கு சுகாதார திணைக்கள அதிகாரிகளும் ஊழியர்களும் கடமையாற்றி வருகின்றனர். ஏனைய மாகாணங்களில் சுகாதார சேவையிலுள்ள வெளிக்கள ஊழியர்கள நோய்த் தடுப்பு வேலைகள், தடுப்பு மருந்து கொடுப்பது போன்ற கடமைகளுக்கு ''பிக்கப்'' மோட்டார் வாகனம் இல்லாவிட்டால் செல்ல மாட்டார்கள். ஆனால் எமது பகுதிகளில் இவர்கள் சைக்கிளில் சென்று தங்கள் கடமைகளைக் கஷ்டப்பட்டு நிறைவேற்றி வருகின்றார்கள்—'' என்றார்.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

தற்போது இப்பிராந்தியத்தில் 112 பொது சுகாதார பரிசோதகர்களின்வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருக்கின்றன. தற்போது 12 பரிசோதகர்களே கடமையாற்றுவதால் பூரணத்துவமான முறையில் சுகாதார சேவைகளை ஆற்ற முடியாத நிலை இருந்து வருகின்றது. இங்கு பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட விரிவுரையாளர்கள், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரினதும் உதவிகளைப் பெற்று சிறந்த பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோம். முதற் தடவையாக இங்கு இப்பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம். — என்றார்.

கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தமது உரையில் —

எமது பிரதேசத்தில் சுகாதாரக் குறைபாடுகளை நீக்குவதற்கு இங்கு ஆரம்பிக்கப்படும் பயிற்சி நெறி பேருதவியாக இருக்குமெனக் கருதுகின்றேன். இங்கு மூல வளங்கள் குறைவாக இருக்கின்ற போதிலும் நலல மூல வளம் இருப்பதால் சிறந்த பயிற்சிகளை வழங்கக் கூடியயவர்கள் இங்கு இருக்கின்றார்கள். பயிற்சியாளர்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்த பின்பு எமது பிரதேசத்து மக்களுக்கு உண்மையான திருப்திகரமான சேவைகளை ஆற்றுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்—என்றுதெரிவித்தார்.

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் தமது உரையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் இங்கு நடத்தப்பட்ட குடும்ப நல சேவையாளருக்கான பயிற்சி நெறிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டு அவர்கள் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேர்வுகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். ''சிறுவர் பாதுகாப்பு நிதியம்'' எமது பகுதி சுகாதார அபிவிருத்திக்கு பெரும் உதவிகளை செய்து வருகின்றது. பல பயிற்சி நெறிகளை இங்கு நடத்துவதற்கு இந்த நிதியம் உதவியுள்ளது. ''2000 ஆண்டில் எல்லோருக்கும் சுகாதாரம்'' என்ற இலக்கை அடைவதற்கு ஏற்ற வகையில் எமது சுகாதார நடவடிக்கைகள் அமைவதற்கு இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சியில் பயிற்சி பெறுவர்களினது பணியும் பெருமளவு அடங்கியுள்ளது.

எமது பகுதியை அச்சுறுத்தி வரும் மலேரியா நோய், வயிற்றோட்ட நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்தி தடுப்பதற்கு இவர்களின் பங்களிப்பும் எதிர்காலத்தில் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன், சிறுவர்பாதுகாப்பு நிதியத்தின் திட்ட முகாமையாளர் யுனிக்கா ஹார்டன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் வரவேற்புரையை நிகழ்த்தினார். பயிற்சி ஒருங் [illegible] கினார். (இ-135)

# கிடைத்த....

(ஐந்தாம் பக்கத் தொடர்)

சுட்டிக் காட்டினர். துருசு கம்பிகளுக்கு இடையில் போடப்பட்டுள்ள பலகைகளுக்கு வெள்ளம் பாய்வதைத் தடுக்க கூடிய அளவுக்குபெரியதாக இல்லை.

இதே போன்றதொரு நிலையே அராலி — யாழ்ப்பாணம் வீதிக்கண்மையிலுள்ள கல்லுண்டாய் தரவைக்குளம் பகுதியிலும் காணப்படுகின்றது. இப்பகுதியில் முன்னர் கடல் நீர் உட்புகாது தடுப்பதற்காகவும், வழுக்கை ஆற்றின் நீரை தடுத்து வைப்பதற்காகவும் அணைக்கட்டடம் நிறுவப்பட்டிருந்தது. தற்போது அங்கு மண்பிட்டிகள் ஏற்பட்டு சரியான முறையில் தண்ணீர் தேங்கி நிற்க முடியாத நிலையில் உள்ளது. கடல் நீரும் உட்புகக் கூடிய அபாய நிலையும் உண்டு.

இப்பகுதியில் பாதுகாப்புப் படையினரின் சில இராணுவக் காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இதையண்டிய பகுதிகளிலுள்ள நெற்காணிகள் பல செய்கை பண்ணப்பட முடியாத நிலையில் தரிசாக இருக்கின்றன. இதனால் காலம்காலமாக இக்காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்தவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

### பிந்திய மழை

இந்த வருடம் பருவகாலம் பிந்திவிட்டது. வழமையாக மழை பெய்ய வேண்டிய காலத்தை விடப் பிந்தி, தமிழுக்கு ஐப்பசி மாதமே மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. அதனால் தை, மாசி மாதங்களிலேயே கதிர் வரும்.

நாம் பயிரிடும் நெல் இனங்கள் அனேகமாக 120, 135, 150, 160 நாள்கள் கழித்தே அறுவடை செய்ய வேண்டி ஏற்படும். தை, மாசி மாதங்களில் வழமையாக போதிய மழை பெய்வதில்லை. மார்கழி மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் பெரும்பாலும் கூடிய மழை பெய்வதில்லை. இம்முறையும் அதேபோல் மழை பெய்யாதுவிட்டால் நாம் கஷ்டப்பட்டு அதிக செலவில் பயிர் செய்துள்ள நெல் வயல்களில் நெல் அறுவடைக்குப் பதிலாக கருகிய நிலையில் உள்ள வைக்கோலைத் தான் வெட்டி எடுக்க வேண்டிய துரதிர்ஷ்டம் ஏற்படலாம்.

எம்மிடம் இருந்த நெல்லை கூட வயல்களில் விதைத்து விட்டோம். மேலதிகமான பணத்தையும் செலவு செய்து விட்டோம். அதனால் அடுத்த போகத்திற்கு உரிய விதை நெல்லையோ சாப்பாட்டு நெல்லையோ பெற முடியாது.

எனவே தற்போது பெய்து வரும் மழை நீரை தக்க முறையில் உரிய வேளையில் வயல்களில் தேக்கி வைக்க வேண்டியது அவசரமும் அவசியமுமான பொறுப்பாகும்.

அனைத்து விவசாயிகளையும் ஒன்று சேர்த்து அவர்களில் சிலரை அந்த அந்த பகுதிகளுக்கு நியமித்து அவர்களைக் கொண்டு தடுப்பு அணைகளை இடவேண்டியது கட்டாயமாகிறது.

விவசாயிகளின் சங்கங்கள் அரச நிறுவனங்கள் உதவி வழங்கும் நிறுவனங்கள் இவ்விடயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு சில விவசாயிகள் மட்டும் சேர்ந்து, ஓரிரு இடங்களில் மட்டும் தடுப்பு அணை போடுவதால் எந்தப் பலனும் ஏற்படாது. பலரது வயல்களிலும் மட்டுமே தண்ணீரைத் தேக்கினால் விரைவில் நீர் வற்றும் தன்மை ஏற்படாது. பலனையும் அனைவரும் பெற முடியும்.

உரப்பைகளில் மண்ணைப் போட்டு, துரிசுகளுக்கிடையில் பலகைகளையும் தென்னை மரத்தின் மேல் குத்திகளை பிளந்தும் போடுவதன் மூலம் அதிக செலவு இல்லாமல் தண்ணீரைத் தடுக்க முடியும். மேலதிகமாக தண்ணீர் வந்தால் அந்த அணைகளின் உயரத்தைக் குறைப்பதன் மூலம் நீரை வெளியேற்றி தேவையான போது தடுக்கவும் முடியும்.

மேற்படி நீரை தடுப்பதற்கும் திறந்து விடுவதற்குமான பொறுப்பை சிலரிடம் ஒப்படைப்பதன் மூலம் திட்டமிட்ட முறையில் நீரைத் தடுக்க முடியும்.

தற்போது பெய்யும் மழை நீர் வீணே கடலில் கலந்து கொண்டு இருக்கின்றது. அனைத்து விவசாயிகளும் தத்தமது பகுதிகளில் நீரைச் சேர்த்து நல்ல பலனைப் பெற முயற்சிக்க வேண்டும்.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை நெற் செய்கையை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும்நடவடிக்கையில் தண்ணீரைக் கடலில கலக்க விடாது தடுப்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இப்பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இவ்விடயத்தில் அதிக கவனமெடுத்து செயற்பட வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

அடுத்த 1998ஆம்ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழுக்கை 'ஆற்றின்' அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்து உதவ வேண்டும் என்றும் பரவலாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

சமூகப் பொறுப்புள்ள பொதுநல அமைப்புக்கள் அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்பையும் பெறமுடியும்.

நாளுக்கு நாள் குத்தரிசியின் விலை அதிகரித்துக் கொண்டு வரும் இக் காலகட்டத்தில் எமது பிரதேசத்தில் சகல வளங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி விவசாய நெற்செய்கை ஊக்குவிக்கப்படவேண்டும். நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு- கிழக்குக்கு ஆயிரம் ஆசிரியர்கள்:

# நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டும் இதுவரை நியமனம் இல்லை

திருகோணமலை, டிச. 9 வடக்கு—கிழக்கில் ஆசிரியர்களை நியமிக்க நேர்முகப் பரீட்சைநடத்தப்பட்டுவிவரங்கள் கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்ட போதிலும், இன்னும் நியமனம் தொடர்பான அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் சகல மாவட்டங்களிலும் கடந்த ஒக்ரோபர் மாதம் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

ஆனால் அவர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை.

இது குறித்து கேட்டபோதே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''நேர்முகப்பரீட்சை நடத்துவது மட்டுமே எமது பொறுப்பு. நியமனங்கள் வழங்குவது கல்விச் சேவை ஆணைக்குழுவின் பொறுப்பாகும், நியமனக் கடிதங்கள் கிடைத்ததும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவோம்'' என்று அந்த அதிகாரி மேலும் விளக்கமளித்தார்.

''மேலும் ஆயிரத்து 300 ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகளை நடத்துமாறு எமக்கு கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் இருந்து பட்டியல் கிடைத்துள்ளது. விரைவில் குறிப்பிட்ட நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படும்'' என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)


## றேடியன்ற் இன்ஸ்ரிரியூட்

கச்சேரி கிழக்கு லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

★ எமது நிறுவனத்தில் ஆண்டு 6 தொடக்கம் A/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தமிழ் : A. மீரா, T. சசிகலா, A. அமல்ராஜ்
விஞ்ஞானம்: P. றூபேந்திரன், A. தேவபாலன்
கணிதம் : B. கிருபாகரன், P. வசந்தன்
ஆங்கிலம் : S. K. மகாலிங்கம், R. சுகந்தினி
சமூகக்கல்வி: K.S. முத்துலிங்கம், S. இராஜேந்திரன்
வர்த்தகம் : S. கருணாகரன்

### புதிய கல்வியாண்டு

ஆரம்பம்: 10 - 12 - 97 பி.ப. 3.00 மணி

★ அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

(51670) - நிர்வாகி



யாழ். மாணவர்களே!

## ENGINEERING துறையில் INTERNATIONAL DIPLOMA

பெற அரிய வாய்ப்பு.

CITY & GUILDS "LONDON" EXAM.
JUNE 98/DEC. 98

CERTIFICATE DIPLOMA IN
8030 ELECTRICAL & ELECTRONIC ENGINEERING
2720 TELE COMMUNICATION & ELECTRONICS ENGINEERING

( புதிய பாடத்திட்டம் )

தமிழ்மொழி விளக்கங்களுடன் 'தபால்மூலம்' வகுப்புக்கள்

LECTURER: K. CHANDIRABOSE, I. Eng., MIEIE,

விவரங்கள் விண்ணப்பப் படிவங்கள் பெற:

கொழும்பில்: APPS
No 116A2/1, காலி வீதி,
வெள்ளவத்தை.
Tel: 596547, 597924.

யாழ். நகரில் POOPALSINGAM BOOK DEPOT

(51535)


## நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலக வாழ்வு: 16 — 10 — 1922



விண்ணுலக வாழ்வு: 24 — 10 — 1997

### அமரர் மார்க்கண்டு இராசேந்திரம்

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதலும், உதவிகளும் வழங்கியவர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

அன்னாரது இல்லத்தில் இன்று (09 - 12 - 1997) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசன வைபவத்திலும் கலந்து காள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மகன், மருமகள், பேரன்,
மருமகன் சீனிவாசகம் குடும்பம்.

கலை மகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(51599)

## கருத்தரங்கும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், டிச. 9

கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் இந்து நாகரிகம், இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் இன்று செவ்வாய் காலை 8.30 தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெறுகின்றன.

கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை, ஆறு.திருமுருகன், சிவமகாலிங்கம், ந. சிவசண்முகமூர்த்தி ஆகியோர் மேற்படி செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஒவ்வோர் ஆசிரியர்களை இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-8)

## சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலை நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிச. 9

சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலையின் கிறிஸ்மஸ் நிகழ்ச்சி நாளை மறுதினம் காலை 9. 30 மணிக்கு யாழ்ப்பாணம் கிளினர் மண்டபத்தில் நடைபெறும்.

மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குருவும் வடக்கு—கிழக்கு மறைமாவட்ட தலைவருமான வண. எஸ். எஸ். கருணைராஜ் தலைமையில் இந் நிகழ்ச்சி இடம்பெறும். (உ)


## தேவை

விற்பனையாளர் தேவை
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு:-
சபா விற்பனை நிலையம்
இருபாலைச் சந்தி.
(51674)



யா/ தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பழை

## ஆண்டு 1 - 5 அனுமதிகள் - 1998

தந்தை செல்வா பாடசாலைச் சமூகமே!
ஆண்டு 1 அனுமதியோடு ஆண்டு 5 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்பதை அறியத்தருகின்றோம்.
விண்ணப்பங்களை உடன் அனுப்பி வையுங்கள்.

அதிபர்
யா/ தந்தை செல்வா தொ. நி. பள்ளி
மருதனார்மடம்.

பாடசாலை செழிப்புறவேண்டி விளம்பரம் நல்குவோர்
பாலா மரத்தொழிலகம்
சிலங்கா கலையகம்
தெல்லிப்பழை
(49868)



## College of Commerce

(பெருமாள் கோயில் அருகில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### புதிய வகுப்புக்கள்
ஆண்டு 8 முதல் 11 வரை

ஆரம்பம்: 10—12—1997 புதன் 3.00 மணி
யாழ். தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

கணிதம் திரு. கருணாகரன்
விஞ்ஞானம் திரு. தேவா
தமிழ் [ திரு. கதிர்காமத்தம்பி, திரு. தங்கவேல்
வரலாறு, சமூகக்கல்வி [ திரு கே. எஸ். முத்துலிங்கம்
ஆங்கிலம் [ திரு. மகாலிங்கம், திரு. வாகீசர்
வர்த்தகம் திரு. சுபேசன்
சமயம் திரு. என். ரி. தரன்

Note
★ கணிதம், விஞ்ஞானம் இப்பாடங்களுக்கு கடந்த 26 வருட வினாக்கள் அலகுரீதியாக மீட்கப்படும்.
★ பிரிவு 2இற்கு அனுமதிகளைப்பெற்றுக்கொள்ளவும்.
(49870)



## துரிதசேவை விரையுங்கள்!

★ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் கவரிடுதல் (லமனேற்றிங்)
★ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள்
★ றோணியோ பிறின்ரிங் வேலைகள்.

இவை அனைத்தும் ஒரே இடத்தில்
★ அருண் ★
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(சி-2302)



## பிறைற்றின்கல்வி நிலையம்

சங்கத்தானை, சாவகச்சேரி.

|கல்வியாண்டு - 1998|

ஆண்டு 4 முதல் O/L வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
12-12-1997 வெள்ளி காலை 9.00மணி (நியம நேரம்)

★ ஆண்டு 5 புலமைப் பரிசில் வினா விடை வகுப்புகள்
ஆசிரியை திருமதி சோ. சியாமளா அவர்களால் நடத்தப்படும்.

(சி/2299) - நிர்வாகி


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக எழுதுவினைஞர்
திருமதி இ. சரோஜினிதேவி
அவர்களின் அன்புக் கணவர்
### திரு. தம்பிராஜா இரவீந்திரன்

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்;
அனைத்து உத்தியோகத்தர்களும்.
நலன்புரிச் சங்கம்
யாழ். பிரதேச செயலகம்.

(51671)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிரச்சினையும் தீர்வும்

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் ஏற்கனவே அதிகாரப் பரவல் முறை நாட்டில் நடைமுறையில் உள்ளது. இப்போது உள்ள மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் போதுமானவை அல்ல; என்பதால் அவற்றை அதிகரிப்பது அரசின் உத்தேச தீர்வு யோசனையின் புதிய பிரதான நோக்கம்.

நாடு முழுவதிலும் புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைச் சமச்சீராக வழங்குவதற்கே அரசின் தீர்வு யோசனையில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தக் கோட்பாட்டை, கொள்கையை மாற்றி, பிராந்தியங்களுக்கு அவையவற்றின் தேவைக்கு ஏற்ப, சமச்சீரற்ற — ஏற்றத் தாழ்வான — வகையில் அதிகாரப் பரவல் (Asymmetrical Devolution) செய்யப்பட வேண்டும் என்ற கருத்து இப்போது — மேலெழுந்துள்ளது.

அமைச்சர் தொண்டமான் இது குறித்து முன்னர் பிரஸ்தாபித்திருந்தார் எனினும், அது ஆராய்வுக்கு எடுக்கப்படவில்லை. தமிழ்க் கட்சிகளும் இந்தக் கருத்தைக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்ட போதிலும் அவை இது குறித்து வெளியே வலுவாகப் பேசவில்லை.

சமச்சீரற்ற அதிகாரப் பரவல் குறித்து இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அடிக்கடி வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டு வருகிறார்.

தேசிய சமாதானப் பேரவை போன்ற அமைப்புகளும் சமச்சீரற்ற அதிகாரப் பரவலை வலியுறுத்துகின்றன, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் கொண்டு வருவதற்கு இந்த முறை பெரிதும் உதவும் என்றும் அவை நம்புகின்றன.

உண்மையில் தமிழ் மக்களே தமக்குத் தன்னாட்சி உரிமை தேவை என்று நீண்ட காலமாகக் கோரி வருகிறார்கள். வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசத்தில் — தாயகத்தில் — தங்களைத் தாமே ஆளும் உரிமை வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு முழுமையான, நிறைவான, திருப்தியான தீர்வு எதுவும் இதுவரை அரசாங்கத் தரப்புகளால் முன்வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் — சிங்களப் பிரதேசங்களுக்கும் — அதிகாரத்தைப் பரவல் செய்யும் முறையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் — உரிமை இழந்தவர்களின் — பிரச்சினையை தீர்ப்பதற்கென விசேட திட்டத்தைக் கொண்டு வராமல் பொதுவான திட்டத்தை அமுல் செய்துள்ளதால் தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேறாமலே உள்ளன. பசித்தவனுக்கு மட்டும் சோறு போடாமல் பசிக்காதவனுக்கும் பங்கிட முனைந்ததால் பசித்தவனுக்கு அரை வயிறும் நிரம்பாத நிலை இதுவாகும்!

தமிழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென்று அவர்களுக்குக் கூடுதல் அதிகாரப் பகிர்வு வழங்கினால், விசேட கவனம் எடுத்தால் ஓரளவேனும் முன்னேற்றம் காணலாம்.

எல்லாப் பிரதேசங்களுக்கும் சமமான அபிவிருத்தி வாய்ப்புத் தேவை என்று அமைச்சர் பீரிஸ் சொல்லும் "சித்தாந்தத்தில்" விடாப்பிடியாக நின்றால், பிரதான பிரச்சினை — இனப்பிரச்சினை — தீர்க்கப்பட முடியாத ஒன்றாகவே என்றும் நீடிக்கும்.

# மதுவரிக் காவலர் பதவிக்கு 14 பேர் தெரிவாகியுள்ளனர்

## கொழும்பில் பயிற்சி பெற அழைப்பு

நவாலி, டிச. 9

யாழ். செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மதுவரிக் காவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் 14 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவிக்கான பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு மதுவரித் திணைக்களத்துக்குச் சமுகமளிக்குமாறு இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிக்கான அழைப்புக் கடிதங்களை யாழ். செயலகத் தாபனக் கிளையில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 14 பேரினதும் சுட்டிலக்கங்கள் வருமாறு:-

97003, 97011, 97029, 97061, 97063, 97120, 97122, 97126, 97139, 97147, 97154, 97161, 97162, 97197. (ஐ-100)

# தேர்தல் தொடர்பாக மக்களின் ஆலோசனை

## ஈ. பி. டி. பி. அமைப்பு கோருகிறது

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் ஈ.பி டி. பி. அமைப்பினர் சேகரிக்கவுள்ளனர்.

தேர்தல் தொடர்பான மேற்படி ஆலோசனைகளை குடாநாட்டில் உள்ள தமது அலுவலகங்கள் மூலம் நேரடியாகவோ அல்லது ஆலோசனைப் பெட்டிகள் மூலமாகவோ பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வீ.கே.ஜெகன் தெரிவித்துள்ளார். (ஐ)

# புனரமைப்பு செய்யப்படாத நிலையில் கிளாலிப் பாடசாலை

கிளாலிப்பகுதியில் உள்ள ஒரேயொரு பாடசாலையான கிளாலி றோமன்கத்தோலிக்க பாடசாலை கடந்த இரண்டு வருடங்களாக எதுவித புனரமைப்பும் செய்யப்படாத நிலையில் உள்ளதால் இப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பாடசாலையில் ஆண்டு 11வரை வகுப்புகள் உள்ளன. எனினும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர், தளபாடங்கள், விவசாய, விஞ்ஞான உபகரணங்கள் கிடையாது போதிய வகுப்பறைகள் இல்லாமையும் பெரும் குறையாக இருந்து வருகிறது.

அத்துடன் இப்பாடசாலையில் மலகூட வசதிகள் இல்லாததால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (இ-117)

### ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை:

# சமயப் பெரியோரின் ஆசியுடன் மாணவருக்கு அனுமதி அட்டை

## மத்திய கல்லூரியில் நேற்று வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 9

இவ்வாண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தற்போது பாடசாலைகளில் விநியோகிக்கப்படுகின்றன.

யாழ். மத்திய கல்லூரியில் பண்டைத் தமிழரின் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான ஒரு வைபவத்தில் மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை நேற்றுப் பெற்றுக்கொண்டனர்.

ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் இடம்பெற்ற அந்த வைபவத்தில் மாணவர்கள் தமது அதிபர், ஆசிரியர்கள், சமயப் பெரியோர்கள், பெற்றோர்கள் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்ற பின்னர் தத்தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு வண. கருணைராஜ், யாழ். அடைக்கல மாதா தேவாலய பங்குத்தந்தை வண. போல் அடிகள் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஆசி வழங்கினர்.

வைபவத்தின் ஆரம்பத்தில் சமயப் பெரியோர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய கல்லூரி அதிபர் அவர்களிடமிருந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொண்டார். பின்னர் வகுப்பாசிரியர்கள் அதிபரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி தத்தமது வகுப்பு மாணவர்களின் அனுமதி அட்டைகளை அவரிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

இறுதியாக மாணவர்கள் தத்தமது வகுப்பு ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் பாதங்களில் வீழ்ந்து வணங்கி தமக்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 150 மாணவர்கள் இவ்வாறு பண்பாட்டு மரபைப் பின்பற்றி அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர். (ஐ 7)

# நவாலி முருகமூர்த்தி கோயிலில் பட்டப் பகலில் கொள்ளை!

நவாலி, டிச. 9

பிரசித்திபெற்ற நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலில் பட்டப்பகல் வேளையில் பெறுமதிமிக்க பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் பலத்த மழை பெய்துகொண்டிருந்த வேளையில் ஆலயத்தின் ஓடுகளைக் கழற்றி உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க ஒலிபெருக்கிச் சாதனங்கள், ஜெனரேற்றரிலிருந்த உதிரிப்பாகங்கள், கசற் வகைகள் என்பனவற்றை எடுத்துக்கொண்டு ஆலய தெற்குப் புற வாசல் கதவை உடைத்துக்கொண்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

இந்த ஆலயத்தில் சில வாரங்களுக்கு முன்பும் இராஜ கோபுரத் திருப்பணி உண்டியல் திருடர்களால் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பெருந் தொகைப் பணம் சூறையாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் பற்றி நவாலி இராணுவ முகாமில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-200)

# 2 மாதகாலத்தின் பின் வன்னியிலிருந்து கடிதங்கள்

கடந்த சனிக்கிழமை வன்னிப்பகுதியிலிருந்து குடாநாட்டுக்கு கடிதங்கள் வந்துள்ளன.

வன்னிப் பகுதியில் நோய் காரணமாக இறந்தவர்கள் பற்றிய மரண அறிவித்தல் தந்திகளும் வந்துசேர்ந்துள்ளன. (இ-11)

இரண்டு மாதங்களின் பின்னர் முதல் தடவையாக

## சிறுவன் பலி!

திருமண வீடு ஒன்றுக்கு தாயாருடன் செல்வதற்கு முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற ஆறு வயதுச் சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து பலியானான்.

செம்பியன்பற்று மானிய வளவு என்னும் இடத்தில் கடந்த வாரம் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவபாதம் கஜேந்திரன் என்னும் ஆறு வயதுச் சிறுவனே மரணமானார். (ஐ-117)

## லியோ கழகம் அங்குரார்ப்பணம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு லியோ கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

லியோ மாவட்டத் தலைவர் சட்டத்தரணி லயன் பா. தவபாலன் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகவும் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஜீ. இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ)

## நிரப்பப்படாத வெற்றிடங்கள்

குடாநாட்டில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நூறு பொது சுகாதார பரிசோதகர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாக தெரியவருகிறது.

மொத்தமாக உள்ள 112 பதவிகளுக்கு தற்போது 12 பேரே பணியாற்றுவதாகவும் ஏனைய 100 பதவிகள் பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## நாளை

**கார்த்திகை 25**

புதன்கிழமை

திதி: ஏகாதசி

பிற்பகல் 3-10 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

பின் இரவு 2.55 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 4.49-6.19

ராகுகாலம்: 12.19 1.49

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## குருநகருக்கு அகதிகள் வருகை

குருநகர், டிச. 9

வன்னியில் இருந்து குடாக் கடல் ஊடாக தினமும் அகதிகள் குருநகருக்கு வந்தபடி உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை 33 பேரும், ஞாயிற்றுக்கிழமை 16 பேரும், நேற்று 8 பேரும் வள்ளங்களிலும், கட்டுமரங்களிலும் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் சீநோர் வலைத் தொழிற்சாலை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ-51)

## ச. ச. நிலைய சமாசம் நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் நாளை புதன்கிழமை ஆகும்.

இதுவரை விண்ணப்பங்களை வழங்காத சனசமூக நிலையங்கள் வலயப் பிரதிநிதிகளிடமோ, சமாச அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒளி விழாக்கள்

யாழ்ப்பாணம், டிச. 9

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு ஒளி விழா நடைபெறவுள்ளது.

கிறிஸ்தவ மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவில் வண. பிதா மௌலிஸ் அடிகள் பிரதம விருந்தினராகவும், கோட்டக் கல்வி அதிகாரி வ. நிமலநாதன், புங்குடுதீவு ப. நோ. கூ. ச. தலைவர் டாக்டர் க. இராசரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ)

★ ★ ★

குருநகர் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் ஒளி விழா நாளை புதன்கிழமை மு. ப. 8-30 மணிக்கு அதிபர் எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ. தானையா முதன்மை விருந்தினராகக்கலந்துகொள்வார். (ஐ-51)

★ ★ ★

குருநகர் சென்ஜேம்ஸ் றோ. க. மகளிர் வித்தியாலயத்தின் ஒளிவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மேரி யுவேமியா தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசா பிரதமவிருந்தினராகவும் குருநகர் பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார், எழுத்தாளர் யோசப்பாலா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர், (ஐ-51)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினர் நடத்தும் ஒளிவிழா இன்று காலை 10-00 மணியளவில் கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம் பெறுகின்றது.

குரு முதல்வர்கள் பலரும் கலந்து கொண்டு அருளுரை வழங்குவர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம் பெறவுள்ளன. (ஐ-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடுருவிய...

(முதலாம் பக்கத் தொடர்)
னியாவுக்குக் கொண்டு வந்தார்.

தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கும் இச்சடலத்தை அவர் இன்று பகல் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு எடுத்துச் சென்று அங்கு புலிகளிடம் ஒப்படைப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-164)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்)
அம்பலப்படுத்துவதில் ஒன்றிணைந்த போக்கைப் பின்பற்றுதல் —

போன்ற பல்வேறு விடயங்களில் தமிழ்க் கட்சிகள் இடையே ஏற்பட்ட ஒற்றுமை அரசுத் தரப்புக்கு அதிருப்தியை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

தவிரவும், அதிகாரப் பரவலாக்கல் விவகாரத்தில் அரசின் திட்டத்துக்கு எதிராகத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டால அது அரசுக்கு மேலும் பின்னடைவைத் தரும் என்று அரச உயர் வட்டாரங்கள் கருதியதாகக் கூறப்படுகின்றது.

இந் நிலையில் தமிழ்க் கட்சிகளிடையே குழப்பதையும், போட்டி — பொறாமை — பூசலையும் ஏற்படுத்துவதற்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒரு நல்ல வாய்ப்பு என அரசு கருதியதாகத் தெரிகின்றது.

தேர்தல் அறிவிப்பு வந்தவுடனேயே தமிழ்க்கட்சிகளுக்கு இடையே குழப்பம் ஆரம்பமாகிவிட்டது. இதுவரை ஐந்து கட்சிக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வந்த — முன்னாள் ஆயுதக்குழுக்கள் — ஐந்தும் கூட ஆளாளுக்கு பிய்த்துக் கொண்டு போட்டிச் செயற்பாட்டை ஆரம்பித்து விட்டன.

— இவ்வாறு அந்த ஆய்வாளர் தெரிவித்தார்.

### கூட்டணியினர் கருத்து

இதற்கிடையில் —

''அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் வெளிப்படுத்திய சமிக்ஞைகளைக் குழப்புவதற்காகவே தேர்தல் பற்றிய அறிவிப்பை அரசு விடுத்திருக்கின்றது'' — என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிச. 9

அண்மையில் நடைபெற்று முடிந்த 8 ஆம் ஆண்டு பொதுப் பரீட்சையின் 5 பாடங்களுக்குமான மதிப்பீட்டுப் பணிக்காக யாழ், நல்லூர் கோட்டங்களைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சமூகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட 5 பாடங்களுக்குமான முதன்மை ஆசிரியர்களையும் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-4)

## இரணைமடுக்..

(முதலாம் பக்கத் தொடர்)
கடந்த சில நாள்களாக குளத்தில் தேங்கும் நீர் வான் கதவுகள் ஊடாக கொஞ்சம் கொஞ்சமாக வெளியே திறந்து விடப்பட்டு வந்தது. ஆனால் குளத்தில் நீரின் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் வான் கதவுகள் அனைத்தையும் திறந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. (ஐ-164)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்)
னோரில் இருவர் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் இருந்து ரீ-56 ரகத் துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ரவைகள் என்பனவற்றையும் பொலீஸார் மீட்டனர்.

விமான நிலையத்தில் அமைந்துள்ள சுகாதாரத் திணைக்களத்தின் விடுதியில் வைத்து ஏனைய நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் சீனாவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, 20 ரவைகள், இராணுவச் சீருடைகள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு விமான நிலையப் பகுதியில் அதி உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பது பாதுகாப்புத் தரப்பினரை அதிர்ச்சியடையச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையப் பகுதியில் வாடகைக்கு சேவையில் ஈடுபடும் வாகனச் சொந்தக்காரர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக அவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து அவர்களிடையே எந்த நேரத்திலும் மோதல்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை இருந்ததாகவும் —

எதிர்த்தரப்பினர் மீது தாக்குதலை மேற்கொள்ளவே ஒரு குழுவினர் இந்த ஆயுதங்களை அங்கு கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு குழுக்களுக்கும் முக்கிய அரசியல்வாதி ஒருவரின் ஆசீர்வாதம் உண்டு எனவும், வாகனத்தில் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டது குறித்து அண்மையிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்குத் தகவல் தெரிவித்த போதிலும் உடனடியாக உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததைத் தொடர்ந்தே இரகசியப் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு விமான நிலையப் பகுதிகளுக்கு விமானப் படையினர், பொலீசார் மற்றும் விமான நிலையப் பாதுகாப்பு சேவையினர் ஆகியோரால் பலத்த பாதுகாப்பு வழங்கப்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்கையில் விமான நிலையத்தில் வாகனங்கள் நிறுத்தப்படும் பகுதிக்குள் ஆயுதங்களுடன் கூடிய வாகனம் எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது என்பது ஆச்சரியமான விடயமாகும் — என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-9-10)

### மன்னிப்புச் சபையின் தலையீட்டால்

# தகவல் தெரியாதிருந்தோரில் ஏழு பேர் விடுதலையாகினர்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு தகவல் தெரியாதிருந்தோரில் மேலும் ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டு யாழ் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து சர்வதேச மன்னிப்புச் சபையினர் எடுத்த நடவடிக்கையின் பேரிலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாக யாழ். செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

விடுவிக்கப்பட்ட ஏழு பேரின் பெயர்கள் வருமாறு:-

★ ரீ. சுவர்ணசீலன் — 8-8-97 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார.

★ ரீ. விக்னராஜா — 24-9-97 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

★ ஆர். அநந்தவகுமார் — 29-6-97 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

★ பி. பரராஜசிங்கம் — 29-6-97 இல் விடுவிக்கப்பட்டார்.

★ எஸ். சாந்தலிங்கம் — 27-10-97 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

★ சே. ஜெயசீலன் — 11-7-97 இல் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டார்.

★ கே நேசகுமார் — 11-7-97 இல் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை ஆர். கமலஹாசன் என்பவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். செயலகத்துக்கு தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## தென்னிந்திய---

(முதலாம் பக்கத் தொடர்)
தலைப் புலிகள் ஆயுதபாணிகளாக இந்தியாவுக்குள் ஊடுருவுவது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக் கருதப்படுவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்)
அதேநேரம் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள சிவசங்கர் மேனன் இரு வாரங்கள் முன்பே இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

அவர் தமது நியமனப் பத்திரத்தை ஜனாதிபதியைச் சந்தித்து உத்தியோகபூர்வமாகக் கையளித்த பின்னரே தமது பணிகளை இங்கு ஆரம்பிக்க முடியும்.

ஆனால் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான நேரம் அவருக்கு ஒதுக்கித்தரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-2-21)

## கூட்டணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
திகால வாழ்நாள்களை அரசியலில் ஓட்டுகின்றனர்.

நாம் ஒருபோதும் அரச இராணுவத்தின் மேலாண்மையை ஏற்கவில்லை. தமிழ் மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கும் கௌரவமான வாழ்க்கைக்காகவுமே உழைத்து வருகின்றோம்

நாம் எமது ஆயுதங்களை தமிழினத்திற்கு எதிராகவோ நேச சக்திகளுக்கு எதிராகவோ ஒருபோதும் உபயோகித்ததில்லை. எமது தற்பாதுகாப்பிற்கு மட்டுமே வைத்திருக்கிறோம்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறையில் உள்ள ஆயுதக் குழுவிடம் ஆயுதங்களைக் களையும்படி கோரும் கூட்டணியினர் புங்குடுதீவிலுள்ள புலிகளிடமும் களையும்படி கோருகின்றனரா?

''ஆண்ட தமிழினம் ஆள நினைப்பது தவறோ'' என அன்று எழுச்சிபேசிய கூட்டணியினர் இன்று அரச படைகளில் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் வலுப்படுத்தவும் முனைவது ஏன்?

பழம் பழுத்தால் வௌவால் வருவது போல, தேர்தல் அறிவித்ததும் கூட்டணியினர் தமிழ் மக்களிடம் வருகின்றனர். மக்களுக்குச் சேவையாற்றவல்ல. அவர்களின் முதுகுகளில் சவாரி செய்வதற்கே.

இந்தியப்படை காலத்தில் ஆயுதக் குழுக்களான ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகியவற்றுடன் கூட்டுச்சேர்ந்து நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களை கைப்பற்றிய கூட்டணியினர் இன்று ''பச்சை மண், சுட்ட மண் கதை'' பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும்படி அல்லது நிறுத்தும்படி கூட்டணியினர் முன்வைக்கும் காரணங்களையே அன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலிலும் முன்வைத்து தேர்தலை நிராகரித்தனர். ஆனால் பின்னர் அதே சூழ்நிலையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். இது அவர்களின் கபட நாடகத்தையே அம்பலப்படுத்துகிறது; உயர் பதவி மோகத்தைத் தெளிவுபடுத்துகிறது.

'ஆடத் தெரியாதவள் அரங்கு சரியில்லை' என்பது போல மக்களுக்கு முகம் கொடுக்க திராணி அற்ற கூட்டணியினர் 'ஆயுதக்குழுக்கள்' என முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களைச் சாடுகின்றனர்.

கூட்டணியினர் அஞ்சுவது ஆயுதங்களுக்கு அல்ல. மக்களுக்கே! - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)


## அவசர வேண்டுகோள்

எமது சழகத்தினால் ஜூலை மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்ட குழந்தை விமல்ராஜ் மற்றும் அவருடைய தாயார் திருமதி யோகேஸ்வரி கனகலிங்கம் ஆகியோருடைய இருதய சிகிச்சை சம்பந்தமாக மக்கள் எமக்கு அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி கூறுகின்றோம். இதுவரை எமக்கு 425,000/- அளவில் நன்கொடைகள் கிடைக்கப் பெற்றுள்ளோம். கொழும்பில் தற்போது தங்கியிருந்து தீவிர சிகிச்சை மேற்கொள்ளும் இருவரதும் தற்போதைய மருத்துவ அறிக்கையின்படி 700,000/- இரண்டு சத்திர சிகிச்சைகளும் உடனடியாக மேற்கொள்ளத் தேவையாக இருக்கின்றது.

இவ்விரு சத்திர சிகிச்சைகளும் 22-12-97 சென்னையில் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்த உயிர் காப்பு சேவைத் திட்டத்தில் எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் அமைப்புக்களோ அல்லது மேற்கொண்டு நன்கொடை வழங்க விரும்புபவர்களோ உடனடியாக எமது செயற் திட்டத் தலைவர் லயன் சி. கேசவராஜன், இந்துக் கல்லூரி, மானிப்பாய் அல்லது இலங்கை வங்கி, மானிப்பாய் சேமிப்பு இல. 12219 உடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
மானிப்பாய் கோவில் பற்று
லயன்ஸ் கழகம்.

(சி/2303)



## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும் கொழும்பு ஐந்தாம் குறுக்குத் தெரு குமாரவேலு அன்கோ நிறுவனத்தின் பங்காளருமான
திரு. பொன்னையா ஸ்ரீவைகுந்தவாசன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி பொன்னையா அவர்களின்

மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

(51679) **V.S.B. Group**



## கண்ணீர் அஞ்சலி

எமது முதலாம் வருட சக மாணவி
செல்வி பாலச்சந்திரன் பாமினி
அவர்களின் தந்தையாரான

### சண்முகம் பாலச்சந்திரன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம். (51685)



உ

## இந்து மத குருமார் ஒன்றியம்

### யாழ்ப்பாணம்

(வடமராட்சிக் கிளை பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும்)

அன்புடையீர்!

மேற்படி கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை 10-12-97 பகல் 2 மணிக்கு மாலு சந்திப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். சகல இந்து மத குருமார்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா
(செயலாளர்)

(51686)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 09-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org